எங்கள் ரொறன்ரோ
மலர் 3, இதழ் 1

**வாக்காளர் நிரலில் இடம்பெறுக!**

2010 அக்டோபர் 25-ம் திகதி திங்கட்கிழமை ரொறன்ரோ எங்கும் 44 குறிச்சிகளில், 1,600-க்கும் அதிகமான மையங்களில் மக்கள் வாக்களிப்பார்கள். மாநகராதிபதி, மாநகர மன்றாளர், பாடசாலைச் சபை நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவிகளை 1.5 மில்லியன் மக்கள் தீர்மானிப்பார்கள்.

நீங்கள் எதிர்வரும் தேர்தல் பற்றிய முக்கிய விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தேர்தலில் விரைந்து வாக்களிப்பதற்கும் வாக்காளர் நிரலில் இடம்பெற வேண்டும். நீங்கள் வாக்களிக்கும் இடம், காலம் என்பவை பற்றி விபரம் தெரிவிக்கும் வாக்காளர் தகவல் அட்டை அவற்றுள் ஒன்று. ரொறன்ரோ மாநகர தேர்தலில் வாக்களிக்கும் தகுதி உடையவர்களின் நிரலே வாக்காளர் நிரல்.

ஓர தேர்தலாண்டில் முதனிலை வாக்காளர் நிரலைத் தயாரிப்பது, மாநகர ஆதனக் கணிப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தின் (MPAC) பொறுப்பு. இந்த நிரல் உங்கள் உதவியுடன் புதுப்பிக்கப்படும். தேர்தல் நாளுக்கான வாக்காளர் நிரலைத் தயாரிப்பதில் அது ரொறன்ரோ தேர்தல் துறைக்கு உதவுகிறது.

நீங்கள் அண்மையில் இடம் மாறினால், அல்லது கனடியக் குடியுரிமை பெற்றால், மேற்படி கூட்டுத்தாபனத்துடன் தொடர்புகொண்டு, அதன் தரவுத்தளத்தில் நீங்கள் இடம்பெற்றுள்ளீர்களா என்று பார்க்கவேண்டும் அல்லது உங்கள் விபரத்தை நீங்கள் புதுப்பிக்க வேண்டும்.

வாடகைக்குக் குடியிருப்பவர்கள்/வாடகை செலுத்துவோர் அவ்வாறு செய்வது முக்கியம். அவர்களுடைய விபரம் தானாகவே தரவுத்தளத்தைச் சென்றடையாது.

மேற்படி கூட்டுத்தாபனத்தின் தரவுத்தளத்தில் நீங்கள் தற்பொழுது இடம்பெற்றுள்ளீர்களா என்பதைக் கண்டறிவதற்கு, அல்லது உங்கள் விபரத்தை மாற்றுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு, 2010 யூன் 1-ம் திகதிக்கு முன்னர் அதனுடன் நேரடியாகவே தொடர்புகொள்ளவும்:

• திங்கள் – வெள்ளி, காலை 8 – மாலை 5.
இலவச தொலைபேசி: 1-866-296-MPAC (6722)

• செவிப்புலன் அற்றோர் அல்லது குன்றியோர் பின்வரும் இலக்கத்தைப் பயன்படுத்தலாம்:
1-877-TTY-MPAC (6722) அல்லது Bell Relay சேவையைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் கனடியக் குடியுரிமை கொண்டவர், ஆகக்குறைந்தது 18 வயது கொண்டவர், ரொறன்ரோ வாசி அல்லது ரொறன்ரோ மாநகரத்தில் வசிக்காவிட்டாலும், ரொறன்ரோ மாநகரத்தில் ஒரு காணிச் சொந்தக்காரர் அல்லது அங்கு வாடகைக்குக் குடியிருப்பவர் அல்லது அவருடைய வாழ்க்கைத்துணை என்றால், உங்களுக்கு வாக்களிக்கும் தகுதி உண்டு. தேர்தல் நாளில் நீங்கள் இலகுவாக வாக்களிப்பதற்கு ஏதுவாக, நீங்கள் வாக்காளர் நிரலில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தவும்.

toronto.ca/elections

or call 311

or e-mail elections@toronto.ca

## மாநகராதிபதி டேவிட் மிலர் விடுக்கும் செய்தி

கடந்த மார்கழி மாதம் நான் கோப்பன்கேகனில் நின்றபொழுது ரொறன்ரோ வாசிகளையும் தொழிலகங்களையும் எண்ணி மிகவும் பெருமைப்பட்டேன். காலநிலை மாற்றத்தை தடுத்து, நலம் பயக்கும் பசுமை வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கு மாநகரங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தெரியப்படுத்தும் நோக்குடன் நானும், கோப்பன்கேகன் மாநகராதிபதி Ritt Bjerregaard அவர்களும் விடுத்த அழைப்பை ஏற்று, உலகம் எங்குமிருந்து 80-க்கு மேற்பட்ட மாநகராதிபதிகள் கூடினார்கள்.

தொடக்க அமர்வில் செய்தித்தாள் கட்டுரையாளரும், சூழல் பிரச்சனைகள் பற்றி எழுதும் தலையாய ஊடகர்களுள் ஒருவருமாகிய George Monbiot அங்கு குழுமியிருந்த மாநகராதிபதிகளிடம் "உலகிலேயே மிகவும் பசுமை வாய்ந்த மாநகரம் எது?" என்று வினவினார்.

அதற்கு ஒரேயொரு விடையே கிடைத்தது. அது ரொறன்ரோவே என்று லாஸ் ஆஞ்சலிஸ் மாநகராதிபதி Antonio Villaraigoasa விடையிறுத்தார். அதை வேறெந்த மாநகராதிபதியும் மறுக்கவில்லை. ஏன்? ஏனெனில், காலநிலை மாற்றத்தை தடுத்து, பணத்தை மீதப்படுத்தி, வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்க வேண்டிய சரியான, புதுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முன்னணியில் திகழும் மாநகரங்களுள் ரொறன்ரோ ஒன்று என்பதை உலகம் ஒப்புக்கொண்டுள்ளது.

ரொறன்ரோ மாநகரம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், சூழலைத் தூய்மைப்படுத்த உதவும் அதேவேளை, எமது உலகளாவிய நற்பெயருக்குத் துணைநிற்கின்றன என்பதை மாநகராதிபதி என்ற வகையில் நான் அறிவேன். மென் தொடருந்துச் சேவை கொண்டு ரொறன்ரோ மாநகர சமூகங்களை ஒருங்கிணைப்பதற்கான போக்குவரத்து மாநகரத் திட்டம் எமது உலகளாவிய முன்னணித் திட்டமாகும். 1960/70 காலகட்ட கொங்கிறீட் தொடர்மாடிக் கட்டடங்களில் குறைந்த செலவில் எரிய சாதனங்களை மாற்றியமைப்பதற்கான மாநகராதிபதியின் கட்டிட சீரமைப்புத் திட்டம் உள்ளூர் வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்து, சமூகங்களுக்கு இளமையூட்டி, எமது புவிவெப்பவாயு வெளியேற்றத்தைக் குறைத்து வருகிறது. மாநகர தூய எரியத் திட்டம், குன்றா எரிய மூலங்களின் பாவனையை ஊக்குவித்து வருகிறது. எரிய நுகர்வை அடியோடு தவிர்ப்பதற்கு Exhibition Place நடவடிக்கை எடுத்து வருகிறது. அடர்த்தியைப் பெருக்கி, எரியத்தை மீதப்படுத்துவதற்கான எமது அதிகாரபூர்வமான திட்டம், எமது வெற்றிகரமான நீல, பச்சை வாளித் திட்டங்கள், பிளாஸ்திக் பைகளுக்கு 5 சத கட்டணம்… என்று நிரல் நீள்கிறது.

சூழல் பேணுவதில் ரொறன்ரோ முன்னணியில் திகழ்வதையும், ரொறன்ரோ வாசிகளையும் எண்ணி நான் சரிக்குச்சரி பெருமைப்படுகிறேன். கழிவை ஒழிப்பதே சூழலுக்கும், உற்பத்திவளத்துக்கும், தொழிலகங்களுக்கும் உகந்தது என்பதை தனியாட்கள், தொழிலதிபர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் புரிந்து கொண்டுள்ளார்கள். இந்த மாநகரத்தை பசுமைப்படுத்துவதில் முன்னணியில் திகழும் தரப்புகள் பல: Tom Heintzman, Bullfrog Power; மாநகரத்துக்குச் சொந்தமான Toronto Hydro Corporation; Minto, Tridel கட்டுமானத் தாபனங்கள். இக்கட்டுமானத் தாபனங்கள் உச்ச நியமங்களின்படி பசுமைச் சமூகங்களில் பசுமைக் கட்டடங்களை அமைத்து வருகின்றன.

எங்கள் தொழிலாளர் இயக்கத் தலைவர்களும் முன்னணியில் திகழ்கிறார்கள். எடுத்துக்காட்டாக International Brotherhood of Electrical Workers (IBEW) அதன் தொழிலாளர்களுக்கு, காற்றாடிச் சக்கரம் போன்ற உயர்தர சூழல் திட்டங்களில் பயிற்சியளித்து வருகிறது. மாநகராதிபதியின் கட்டிட சீரமைப்புத் திட்டத்தில் கட்டுமானத் துறையினர் மாநகரத்துடன் ஒத்துழைத்து வருகிறார்கள். 21-ம் நூற்றாண்டுக்கு வேண்டிய திறன்களை ஈட்டிக்கொள்வதில் இளையோர்க்கு அவர்கள் உதவி வருகிறார்கள். அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த இளையோர் பத்திரமான சூழ்நிலையில் தகுந்த சம்பளத்துடன் உகந்த வேலை பார்ப்பதற்கு அவர்கள் தொடர்ந்து உதவி வருகிறார்கள்.

கனடாவில் சூழல் பேணுவதில் உச்சத்தில் திகழும் மாநகரம் ரொறன்ரோவே என்று கடந்த மாதம் Corporate Knights Magazine அறிவித்தது. புவிவெப்பவாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான எமது தீவிர திட்டத்துக்கு உச்சப் புள்ளி கிடைத்தது. "சூழல் பேணும் படிமுறை, மாநகரங்களிலேயே தொடங்க வேண்டும். அதற்கு ரொறன்ரோ வழிகாட்டுகிறது," என்று மேற்படி சஞ்சிகை முழங்கியது.

மாநகரத்தைக் கட்டியெழுப்பும் மேற்படி திட்டங்கள் அனைத்தும் யூன் மாதம் ரொறன்ரோவில் நடைபெறவுள்ள கனடிய மாநகர கூட்டவைய (FCM) மாநாட்டில் முன்வைக்கப்படும். இங்கு குழுமும் வெளிநாட்டு மாநகராதிபதிகளும், உள்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளும் பின்வரும் வினாவுக்கு விடையளிப்பார்கள்: கனடாவை வலுப்படுத்துவது எங்ஙனம், வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் வண்ணம், சூழலை மதிக்கும் வண்ணம் கனடாவை வலுப்படுத்துவது எங்ஙனம், மத்திய - மாகாண அரசினர் மற்றும் மக்கள் அனைவரின் ஆதரவுடன் மாநகர அடிப்படைக் கட்டுமானங்களை மேற்கொண்டு, விருத்திசெய்யும் வண்ணம் கனடாவை வலுப்படுத்துவது எங்ஙனம்?

FCM மாநாட்டை நான் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன். கோப்பன்கேகனைச் சேர்ந்த எங்கள் வெளிநாட்டு நண்பர்களைப் போலவே எமது கனடிய மாநகரங்களைச் சேர்ந்த சகபாடிகளையும் ரொறன்ரோ ஆட்கொள்ளும் என்பதை நான் அறிவேன். ஏனைய மாநகரங்கள் மேற்கொள்ளும் புதுமைத் திட்டங்கள் பலவற்றிலிருந்தும் நாங்கள் தொடர்ந்தும் பாடம் கற்போம் என்பதையும் நான் அறிவேன்.

மாநகராதிபதி என்ற வகையில் இந்த மாநகரம் அடைந்துவரும் மாபெரும் முன்னேற்றத்தை அன்றாடம் காணும் பேறு பெற்றவன் நான். நாங்கள் ஆற்றும் பணியை உலகம் மெச்சுவதைக் கேட்டு நாம் பெரிதும் நிறைவு கொள்கிறோம். ரொறன்ரோவை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். நீங்களும் பெருமைப்படுகிறீர்கள் என்பதை நான் அறிவேன்.

toronto.ca/mayor_miller

**ரொறன்ரோ மாநகர வாசிகளிடையே இடம்பெறும் ஒளிப்படப் போட்டி**

2009 மார்கழி மாதம் முடிவடைந்த "ஒரு மகத்தான மாநகரத்தை ஒருங்கிணைந்து கட்டியெழுப்புவோம்" என்னும் ரொறன்ரோ மாநகர ஒளிப்படப் போட்டிக்கு 700 ஒளிப்படப்பிடிப்பாளர்கள் ஏறத்தாழ 41,000 ஒளிப்படங்களை முன்வைத்தார்கள். மூவரைக் கொண்ட குழாம் ஒன்று 13 வெவ்வேறு வகுதிகளில் 52 வெற்றிப் படங்களையும், 130 பாராட்டுப் படங்களையும் தெரிவுசெய்தது, ரொறன்ரோ மாநகர உணர்வையும், வலுவையும், தனித்துவ இயல்பையும் கிளர்த்தவல்ல படங்களை நடுவர்கள் நாடினார்கள். பொதுமக்கள் மாநகர இணையத்தள கலைக்கூடத்தில் வெற்றிப் படங்களைக் கண்டுகளிக்கலாம்.

ஜனவரி 18-ம் திகதி மாநகர மண்டபத்தில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் மாநகராதிபதி டேவிட் மிலர், மாநகர முகாமையாளர் ஜோ பெனசெடி ஆகியோர் வெற்றிபெற்ற படப்பிடிப்பாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள். "இது ரொறன்ரோ மாநகரத்தின் திறமைவளம் மகத்தான முறையில் வெளிப்படவும், பொதுமக்கள் மாநகரப் பணியில் ஈடுபடவும் வழிவகுத்த போட்டி" என்றார் டேவிட் மிலர்.

வெற்றிபெற்ற படப்பிடிப்பாளர்களின் ஒளிப்படங்கள் இணைய வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுக்கு ரொறன்ரோ மாநகரம் பரிசு வழங்கியது. அண்மையில் வெளியிடப்பட்ட *ரொறன்ரோ மாநகர காட்சிக் கொடை, 1865 முதல் இற்றைவரையான உத்தியோகபூர்வமான மாநகர ஒளிப்படக்கோவை* (*Toronto's Visual Legacy, Official City Photography from 1865 to the present*) என்னும் நூலும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

toronto.ca/photocontest

**311 ரொறன்ரோ - இணைய வாயிலாக விரிவடைகிறது**

311 ரொறன்ரோ தொடர்பு நிலையம் செப்டெம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டது. அன்று தொட்டு கிழமையில் ஏழு நாட்களும், அன்றாடம் 24 மணித்தியாலங்களும் மாநகரவாசிகளின் ஆயிரக் கணக்கான தொலைபேசி அழைப்புகளுக்கு அது பதிலிறுத்துள்ளது. அவற்றுள் சில அழைப்புகள் வெறும் விபரமே நாடின. எனினும் பல அழைப்புகள் சேவை நாடி விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள். (உலோகப் பொருட்கள், சாதனங்கள் போன்ற) வெள்ளைப் பொருட்களை அகற்றுவதற்கான வேண்டுகோள் முதல் குழாய்வகை திருத்த வேலைகள் இடம் பெறும்பொழுது நீர்-விநியோகத்தை நிறுத்துவதற்கான வேண்டுகோள் வரை எந்த வேண்டுகோளும் அவற்றுள் அடங்கும்.

311 ரொறன்ரோ - இணைய சேவை தொடங்கிய பின்னர் மாநகரவாசிகள் இணைய வாயிலாகவே பல சேவைகளை நாடி வேண்டுகோள் விடுக்க முடிகிறது. எமது இணையப் பக்கத்தை (toronto.ca/311) நாடி, சேவை நாடும் வேண்டுகோளைத் தெரிவுசெய்து, இணைய வாயிலாகவே உரிய படிவத்தை நிரப்பிச் சமர்ப்பிக்கவும்.

தற்பொழுது 311 இலக்கத்தை நீங்கள் அழைத்து சேவை நாடும்பொழுது இடம்பெறுவது போலவே, நீங்கள் மேற்கண்டவாறு சேவை நாடி விடுக்கும் வேண்டுகோளுக்கு ஒரு தொடர்பு இலக்கத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். அதனைக் கொண்டு இணைய வாயிலாக அல்லது 311 இலக்கத்தை அழைத்து நிலைவரத்தை நீங்கள் கண்டறியலாம்.

தனது சேவைகளை எளிதில் மேற்கொள்ள மாநகரம் எடுக்கும் முயற்சிகளுள் 311 இணைய சேவை மற்றுமொரு படியாகும்.

toronto.ca/311
or call 311 (in Toronto only)
or 416-392-CITY (2489)

**ரொறன்ரோ வாசிகளே, உடற்செயற்பாட்டில் ஈடுபடுக!**

வெளிக்களங்களைத் துய்ப்பதற்கு நீங்கள் மாநகரத்துக்கு வெளியே செல்லத் தேவையில்லை. ரொறன்ரோ வாசிகள் வெளிக்களங்களில் நலம்பெற நடமாடி வாழும் பாங்கில் ஈடுபடும் வாய்ப்பை அளிக்கவும், மேம்படுத்தவும் ரொறன்ரோ சோலை-வன-பொழுதுபோக்குத் துறை பல்வேறு அமைப்புகளுடன் கூடி ஏற்பாடு செய்கிறது. மக்கள் நடைபயில ஏற்பாடு செய்யும் கழகங்களுள் ஒன்று: Toronto Bruce Trail Club (TBTC) .

மேற்படி கழகம் நகர்ப்புற நடையை கிரமமாக நடத்தி வருகிறது. நடை தொடங்கி முடியும் இடங்களில் ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் (TTC) துணைநிற்பது வழக்கம். பெரிதும் TTC தரிப்பிடங்களுக்கு அருகே நடை தொடங்கி முடிவடையலாம். ரொறன்ரொ சோலைகளில் உள்ள நடைபாதைகள் வழியே மூன்று, நான்கு மணித்தியாலங்கள் 10, 12 கிலோமீட்டர் நடப்பதாகவே நகர்ப்புற நடைகள் பலவும் அமைவதுண்டு. தொடக்க உலாவலர்களைக் கருத்தில் கொண்டு மிதவேக நடைகள் ஒழுங்குசெய்யப்படுவதுண்டு. இவை இலவச நடைமுறைகள். சான்றிதழ் பெற்ற உலாவல் தலைவர்கள் வழிநடத்துவார்கள்.

Toronto Bruce Trail Club இணையத்தளத்தில் நடைகள், உலாக்கள் பற்றிய முழு அட்டவணை உண்டு. Walk routes are part of the” “எங்கள் சோலைகளையும் பாதைகளையும் ஆய்விடல்” (Exploring our Parks and Trails) படத்தில் நடைபாதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. உங்கள் உள்ளூர் நகரசமூக நிலையத்தில் படங்கள் கிடைக்கும். வேறு இடங்களிலும் அவற்றை எடுத்துக்கொள்ளலாம். விபரங்களுக்கு அழைக்கவும்: 311. நீங்கள் பின்வரும் இலக்கத்தைப் பயன்படுத்தி Bruce Trail Club செய்திமடல் பெறுவோர் நிரலில் சேரலாம்.

torontobrucetrailclub.org
or call 416-763-9061
or e-mail information@torontobrucetrailclub.org

**வீரப் பதக்கம்**

2008 யூலை 20-ம் திகதி 2 Secord Ave முகவரி கொண்ட இடத்தில் வெடிப்பதிர்வு ஏற்பட்டபொழுது செயலில் குதித்த ரொறன்ரோ தீயணைப்பாளர்கள் இருவர் 2009 நவம்பர் 27-ம் திகதி ஒன்ராறியோ தீயணைப்பாளர் வீரப் பதக்கம் (Ontario Medal for Firefighter Bravery) பெற்றார்கள். நிலத்தடி ஊர்தி மடுவத்தில் வெளிப்பட்ட புகையை மூவர் கொண்ட தீயணைப்பாளர் அணி ஆராய்ந்துகொண்டிருந்த வேளையில் அருகிலிருந்த மின்சாரக் கூடத்தில் வலுத்த வெடிப்பதிர்வு ஏற்பட்டது. அது தீயணைப்பாளர்களைக் கீழே தூக்கி வீசியது. அவர்களைச் சூழ்ந்து பாரிய புகை எழுந்தது. இரு தீயணைப்பாளர்கள் தட்டுத்தடுமாறி வெளியேறினார்கள். எனினும் அவர்களுடைய முதல்வர் அவர்களுடன் வெளிவரவில்லை. அதிகரிக்கும் வெப்பம், கடுத்த கரும் புகை ஊடாக முதல்வரைக் கண்டுபிடிக்கும்படி James Gale, Michael Maier ஆகிய வேறு தீயணைப்பாளர்கள் இருவர் திருப்பி அனுப்பப்பட்டார்கள். கடந்த மாதம் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் ரொறன்ரோ தீயணைப்புச் சேவையின் உச்ச விருதாகிய பாராட்டுக் கடிதத்தை Gale, Maier இருவரும் பெற்றுக்கொண்டார்கள்.

toronto.ca/fire

**மாநகர இணையத்தளம் பற்றிய கருத்துரை**

மாநகர இணையத்தளம் (toronto.ca) மீள வடிவமைக்கப்படவுள்ளது. வடிவமைப்பு அணி உங்கள் பங்களிப்பை நாடுகிறது. 2009 மார்ச் மாதம் அதன் முகப்பு புதுப்பிக்கப்பட்டதை நீங்கள் அவதானித்திருக்கலாம். எனினும், அது இறுதித் தோற்றம் அல்ல. அது இறுதித் தோற்றத்தின் கொள்ளளவு மட்டுமே.

மாநகர இணையத்தளத்தை எவ்வாறு செம்மைப்படுத்தலாம் என்று மீள்வடிவமைப்பு அணி அலுவலர்கள் பயனாளர்களிடம் கேட்கிறார்கள். இங்குதான் நீங்கள் சம்பந்தப்படுகிறீர்கள். உங்களிடம் நாங்கள் கேட்டறிய விரும்புகிறோம். நீங்கள் toronto.ca இணையத்தளம் செல்லும்பொழுது அடிப்பதாகையின் வலதுபுறம் உள்ள Comment இணைப்பில் சொடுக்கி, உங்கள் எண்ணத்தை முன்வைக்கவும்.

மாநகர இணையத்தளம் பற்றிய உங்கள் மீள்தரவை முன்வைப்பதற்கு நீங்கள் ஒரு தடவை சொடுக்கினால் போதும்.

toronto.ca

**கோடையில் என்றுமிலாவாறு பெருநிகழ்ச்சிகளும் தெருவேலையும் களைகட்டப் போகின்றன**

ரொறன்ரோ வாசிகளே, தயாராகுங்கள் – கோடையில் தெருவேலைகள் களைகட்டப் போகின்றன. பெருஞ்சிறப்பு வாய்ந்த தொடர்நிகழ்ச்சிகளும், மிகவும் அரும்பாடுபட்டு எய்தவேண்டிய தெரு, நீர் விநியோக கட்டுமானத் திட்டங்களும் கோடையில் ரொறன்ரோ மாநகரத் தெருக்களைக் களைகட்ட வைக்கும்.

யூன் இறுதி முதல் யூலை இறுதி வரை ரொறன்ரோவில் பற்பல பெருநிகழ்ச்சிகள் இடம்பெறும். இந்நிகழ்ச்சிகள் இயன்றவரை சுமுகமாக இடம்பெற உதவும்பொருட்டு தெருமறிப்புகள் இடப்படும்.

யூன் இறுதியில் 20 குழும நாடுகளின் உச்சமாநாடு (G20 Summit) ரொறன்ரோ அகநகர மையத்தில் நடைபெறும். யூன் இறுதியில் அல்லது யூலை தொடக்கத்தில் மாட்சிமை தங்கிய அரசி இரண்டாவது எலிசபெத், எடின்பறோ கோமகன் ஆகியோர் வருகை தருவார்கள். யூலை தொடக்கத்தில் Shriners அமைப்பு இங்கு மாநாடு கூடும். யூலை 4-ம் திகதி Pride Parade நடத்த நாள் குறிக்கப்பட்டள்ளது. யூலை நடுக்கூறு முதல் மாத இறுதி வரை St. George's Golf and Country Club (Eglinton Avenue and Islington Avenue area) பகுதியில் Canadian Open Golf Tournament நடைபெறும். யூலை 16 முதல் 25 வரை Beaches Jazz Festival நடைபெறும். யூலை 31-ம் திகதி Caribana இடம்பெறும்.

அவற்றுடன் சேர்த்து தெரு, நீர் மூலக்குழாய் அமைப்பு வேலைகள் மும்முரமாக இடம்பெறும் பருவம் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது உங்களுக்கு முழு நிலைமையும் புரியும். கனடா அடிப்படைக் கட்டமைப்பு ஊக்குவிப்பு நிதியத் திட்டத்தின் மூலம் மாநகர நிலைமுதல் திட்டம் விரைவுபடுத்தப்பட்டுள்ளதால், வழமையை விட இந்த ஆண்டு அதிக அமைப்புவேலைகள் இடம்பெறும்.

மாநகரத்தில் பயணிப்பவர்கள் பொறுமை காக்கவும், தத்தம் இடங்களுக்குப் போய் வர மேலதிக நேரம் ஒதுக்கவும், இயன்றவரை பொது போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தவும் வேண்டும்.

மேற்படி பெருநிகழ்ச்சிகள் நெருங்குந்தோறும் எங்கள் இணையத்தளத்தைப் பார்த்து தெருவமைப்பு, தெருமறிப்பு விபரங்களை நிங்கள் திட்டவட்டமாக அறியலாம்.

toronto.ca/transportation

**ரொறன்ரொவில் நடைபெறவுள்ள 20 குழும நாடுகளின் உச்சமாநாடு, உலகத்தை எமது மாநகரத்துக்கு கொண்டுவருகிறது**

மத்திய அரசும், ரொறன்ரோ மாநகரமும் மக்களுக்கு விடுக்கும் செய்தி:

2010 யூன் 26 சனிக்கிழமை முதல் 27 ஞாயிற்றுக்கிழமை வரை 20 குழும நாடுகளின் உச்சமாநாடு ரொறன்ரொ மாநகர மாநாட்டு நிலையத்தில் (Metro Toronto Convention Centre) நடைபெறும் என்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

மாநாட்டு ஊடக நிலையத்தின் அமைவிடம் Exhibition Place-ல் உள்ள Direct Energy Centre ஆகும். (ஆயிரக் கணக்கான உள்ளூர், தேசிய, சர்வதேச ஊடகர்கள் இங்கிருந்தே மாநாட்டுச் செய்திகளை அறிவிப்பார்கள்).

நாங்கள் பெருநிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்த வல்லவர்கள். கூட்டங்களையும், மாநாடுகளையும் வெற்றிகரமாக நடத்துவதற்கும், அவற்றில் பங்குபற்றுவோருக்கு ஒரு நிகரற்ற அனுபவத்தை ஈவதற்கும் வேண்டிய இடவசதிகள், போக்குவரத்துக் கட்டுக்கோப்புகள், சிறப்பம்சங்கள் அனைத்தும் படைத்தவர்கள் நாங்கள். ஆதலால்தான் 20 குழும நாடுகளின் உச்சமாநாட்டை ரொறன்ரோவில் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

மாநாடு ரொறன்ரோவில் நடைபெறுவதால் இங்கு ஓர் அனுகூலமான தாக்கம் ஏற்படும். சுற்றுலா, தொழில்துறை, வங்கித்துறை, பண்பாடு, பல்வண்மை என்பவற்றைப் பொறுத்தவரை, ரொறன்ரோ உலகுக்கு ஈயும் அனைத்தையும் நாம் வெளிப்படுத்துவோம். ரொறன்ரொ மாநகரம் சூழல் துறையில் முன்னணியில் திகழும் உண்மை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. சூழல் சார்ந்த இலக்குகளை எய்துவதில் மாநகரவாசிகளுடனும், தொழிலகங்களுடனும் சேர்ந்து ரொறன்ரோ மாநகரம் பாடுபடுந்தோறும், அந்த உண்மையை வெளிப்படுத்த மேற்படி மாநாடு மாநகரத்துக்கு வாய்ப்பளிக்கும். புதிய சர்வதேச தொழிலக உறவுகள் பூணவும் மேற்படி மாநாடு இம்மாநகரத்துக்கு நிகரற்ற வாய்ப்பளிக்கும்.

1997-ம் ஆண்டு ஆசியாவில் ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டதை அடுத்து 20 நாட்டுக் குழுமம் அமைக்கப்பட்டது. அண்மையில் உலக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து 20 குழும நாடுகளின் தலைவர்கள் ஒழுங்காகக் கூடி, உலக பொருளாதாரம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை ஆராய்ந்து வருகிறார்கள். உலக பொருளாதார உறுதிப்பாடு தொடர்பான முக்கிய பிரச்சனைகள் குறித்து கைத்தொழில்வளம் மிகுந்த நாடுகளுக்கும் சந்தைப் பொருளாதாரத்தில் மேலோங்கும் நாடுகளுக்கும் இடையே வெளிப்படையான, ஆக்கபூர்வமான கலந்துரையாடலை மேம்படுத்தும் தலையாய சர்வதேச பொருளாதார அபிவிருத்தி அரங்கே 20 குழும நாடுகளின் உச்சமாநாடு.

கனடிய வெளிநாட்டு அலுவல்கள்-சர்வதேச வர்த்தகத் திணைக்களத்தின் ஓர் அங்கமாக விளங்கும் உச்சமாநாட்டு முகாமை அலுவலகமே (SMO) மாநாட்டு ஏற்பாடுகளுக்குப் பொறுப்பு. சூழலை உணர்ந்து, பசுமைப் பண்புடன் மாநாடு நடைபெறுமாறு பார்ப்பதும் மேற்படி அலுவலகமே.

20 குழும நாடுகளின் உச்சமாநாடு போன்ற பெருநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக கனடாவில் தங்கியிருக்கும் சர்வதேச பாதுகாப்புக்குரிய ஆட்களுக்கும், வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கும், பேராளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் விடயங்களில் கனடிய தேசிய காவல்துறை (RCMP) தலையாய பங்கு வகிக்கிறது.

20 குழும நாடுகளின் உச்சமாநாட்டுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் பீல் பிரதேச காவல்துறையுடனும், மற்றும் பிற பொது பாதுகாப்பு முகமைகளுடனும் சேர்ந்து ரொறன்ரோ காவல்துறை முழுப் பங்கு வகிக்கும். RCMP தலைமையில் 8 குழும, 20 குழும நாடுகளின் உச்சமாநாடுகளுக்குப் பாதுகாப்பு வழங்க அமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பிரிவில் (ISU) பாதுகாப்பு முகமைகள் அனைத்தும் முக்கிய பங்கு வகிக்கின்றன. 8 குழும நாடுகள் யூன் 25-ம, 26-ம் திகதிகளில் Huntsville நகரத்தில் கூடும்.

சமூகத்துடனும், உச்சமாநாட்டின் தாக்கத்துக்கு உள்ளாகக்கூடிய ஆட்களுடனும், வளவுகளுடனும், தொழிலகங்களுடனும் வெளிப்படையாக, நேர்மையோடு, தெளிவாக உரையாட ரொறன்ரோ மாநகரம், ISU, SMO ஆகியவை உறுதிபூண்டுள்ளன. ஊர்திப் போக்கவரத்து, பாதுகாப்பு, மற்றும் பிற விடயங்கள் பற்றிய புத்தம்புதிய விபரங்களை அவை பல்வேறு வழிகளில் முன்வைக்கும்.

உச்சமாநாடு இடம்பெறுந் திகதி நெருங்கவே மட்டுப்படுத்திய தெருப் பாவனையால் பாதிக்கப்படும் பகுதிகளையும், வலயங்களையும் காவல்துறையினர் தெளிவாகச் சுட்டிக்காட்டுவார்கள். அவசரசேவை ஊர்திகளுக்கும், தகுந்த அனுமதிப் பத்திரம் கொண்டவர்களுக்கும் அத்தகைய மட்டுப்பாடுகள் ஏற்புடையனவல்ல.

பாதுகாப்பு வலயங்களால் பாதிக்கப்படும் பகுதிகளுக்குள் நீங்கள் இருக்கத் தேவையில்லை என்றால், இயன்றவரை மாற்றுப் போக்குவரத்து மார்க்கங்களை அல்லது மாற்றுத் திட்டங்களைப் பயன்படுத்தி தாமதங்களைத் தவிர்க்கவும். ஊர்திப் போக்குவரத்துத் திட்டம், தாமதங்கள் ஏற்படக்கூடிய பகுதிகள் பற்றி அறிவிப்பதில் இம்மாநகரம் மத்திய அரச தரப்புகளுடனும், காவல்துறையினருடனும் இணைந்து பணியாற்றும். பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளுக்கு ஊடாக ஊர்தியிலோ நடந்தோ செல்லவேண்டியோர் புத்தம்புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

சமூகத்தை நாடிச்சென்று வெளிப்படையாகவும், தெட்டத்தெளிவாகவும் தகவல் தெரிவிப்பதற்காக ஒரு குழுமத்தை காவல்துறையினர் தோற்றுவித்து வருகிறார்கள். அது SMO, ISU என்பவற்றுடன் இணைந்து செயற்படும். அந்த சமூக உறவுக் குழுமத்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம். தொலைபேசி: 1-888-446-4047 அல்லது மின்னஞ்சல்: crg-grc@g8-g20isu.ca.

இக்கட்டுரையின் தலைப்பில் உள்ள 20 குழும நாடுகளின் உச்சமாநாட்டு இலச்சினை, அந்நிகழ்ச்சிக்கென்றே விசேடமாக வடிவமைக்கப்பட்டது. கனடிய தேசிய கோபுரம் (CN Tower) அதில் மிளிர்கிறது. ஒரு பொது இலக்கை நோக்கி ஒருமிக்கும் பாதைகளை இக்கோபுரத்தின் முக்கோணங்கள் புலப்படுத்துகின்றன. இப்பாதையின் முடிவில் காணப்படும் வட்டம் 20 குழும நாடுகளின் உச்சமாநாட்டைப் புலப்படுத்துகிறது. ரொறன்ரோ உலகிலேயே பல்லினவண்மை மிகுந்த மாநகரங்களுள் ஒன்றாகத் திகழ்வதற்கு ஏதுவான பண்பாட்டுத் தன்மைகளை, இலச்சினையில் காணப்படும் வைரங்களின் பல்வேறு பருமன்களும் எண்ணிக்கைகளும் புலப்படுத்துகின்றன.

g8-g20isu.ca

**உங்களுக்கு வேண்டிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்**

ரொறன்ரோவில் மக்கள் வேலைவாய்ப்புகளையும், சமூகநல சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் விதத்தை இரு புதிய நிகழ்திட்டங்கள் மாற்றியமைத்து வருகின்றன.

**உங்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான இணையப் பக்கம்** (WAYS) என்பது இணைய வாயிலாக சமூகநல உதவி பெறுவதற்கான ஒரு நிகரற்ற விண்ணப்பம் கொண்டது. இது ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் கிடைக்கும். வேலைவாய்ப்புச் சேவைகள், நிதியுதவி, சமூகநல உதவிகள் என்பவற்றை நீங்கள் ரொறன்ரோ வேலைவாய்ப்பு – சமூகநல சேவைகள் (TESS) துறை ஊடாக எளிதில் பெற்றுக்கொள்ள WAYS வழிவகுக்கிறது.

**குடும்பங்களில் முதலீடு** (IIF) என்பது விரும்பியோர் மேற்கொள்ளும் நிகழ்திட்டம். TESS, சோலை-வன-பொழுதுபோக்குத் துறை (PFR), சிறார் சேவைத் துறை (CS), ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை (TPH) என்பன இதனை இணைந்து மேற்கொண்டு வருகின்றன. சமூகநல உதவி பெறும் குடும்பம் அதன் அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு, பொழுதுபோக்கு, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் சேவைகள் பலவற்றை IIF வழங்குகிறது.

மாநகரப் பணியாளர்கள் குடும்பத்தவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டியவற்றை அறிந்துகொள்கிறார்கள். பணியாளர்களும் குடும்பங்களும் சேர்ந்து ஒரு நடவடிக்கைத் திட்டத்தை உருவாக்குவர். IIF பணியாளர்கள் வேறு சேவையமைப்புகளுடன் ஒருங்கிணைந்து, குடும்பங்களுக்கு அறவே தேவைப்படும் சேவையை இனங்காண்பர். எடுத்துக்காட்டாக, பொழுதுபோக்கு வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பதிவுக் கட்டணம், உபகரணச் செலவு போன்ற தடங்கல்களைத் தாண்டவதில் உதவி கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, தாங்கள் சமூகத்தின் அங்கத்தவர்கள், அதனுடன் இணைந்தவர்கள் என்பதைக் குடும்பத்தவர்கள் மேன்மேலும் உணர்ந்துகொள்வதற்கு IIF உதவும்.

toronto.ca/socialservices

**மாநகர புதுவிபரமடல்**

கனடாவின் மாபெரும் மாநகரமாகவும், ஆறாவது பெரிய ஆட்சிமன்றத்தின் உறைவிடமாகவும் விளங்கும் ரொறன்ரோவில் இடம்பெறும் புத்தம்புதிய சேவைகள், புதுமைகள், சாதனைகளில் *ரொறன்ரோ மாநகர புதுவிபர மடல்* கவனம் செலுத்துகிறது. இதில் நாட்டம் கொண்ட பொதுமக்களுக்கானதே இம்மின்னஞ்சல்மடல்.

toronto.ca/city-update (to read or to subscribe)

**ரொறன்ரோ மாநகர Automotive Building மறுசீரமைப்பு**

1929 ஆவணி மாதம் Exhibition Place –ல் Automotive Building திறந்துவைக்கப்பட்டது. அப்பொழுது அது ஒரு நவீன அதிசயமாகக் கருதப்பட்டது. அதனை வடிவமைத்தவர்: Douglas Kertland. அதனை ஆறே ஆறு மாதங்களில் அமைத்து முடித்தது ஒரு சாதனை ஆகும். கலை-ஒப்பனைப் பாங்கில் வடிவமைக்கப்பட்ட Automotive Building நுண்ணிய முறையில் செதுக்கப்பட்ட கற்கள் பதிக்கப்பெற்றது. கண்கவர் ஒளிச் சிறப்பு வாய்ந்தது. தொடக்கத்தில் கனடிய தேசிய பொருட்காட்சியகத்தில் ஊர்திகளைக் காட்சிக்கு வைப்பதற்காகவே Automotive Building அமைக்கப்பட்டது. அப்புறம் அது வேறு வரலாறு படைத்தது. இரண்டாம் உலகப் போரின் பொழுது கனடிய அரச கடற்படையினருக்கும் அது இடவசதி அளித்தது.

இப்பொழுது அது திறந்துவைக்கப்பட்டு 80 ஆண்டுகள் கழிந்தவிட்டன. கட்டடம் புதுக்கி அமைக்கப்பட்டு, வியத்தகு மாநாட்டு மண்டபமாக மீள்நிலைப்படுத்தப்பட்டு, Allstream Centre என்று மறுபெயரிடப்பட்டுள்ளது. கனடாவிலேயே மிகப்பெரிய ஆடற்கூடமும், மேலதிகமாக 30,000 சதுர அடி கொண்ட மாநாட்டு மண்டபமும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் இயற்கை ஒளி மிகுந்தவை. சூழவுள்ள தோப்புடனும், ஒன்ராறியோ ஏரியுடனும் இணைந்தவை. புறக்கட்டிடம் 1929-ல் எய்திய புகழின் மட்டத்துக்கு மீள்நிலைப்படுத்தப்பட்டுள்ளது. மரபார்ந்த உட்புறக் கலை-ஒப்பனைச் சிறப்புகள் அதன் கடந்தகாலப் பெருமையைப் புலப்படுத்துகின்றன. Allstream Centre-ன் மையம் Princes' Gates-ன் உள்ளே அமைந்துள்ளது. ரொறன்ரோ மாநகர Exhibition Place-க்கு ஒரு கம்பீரமான வாயிலாக அது அமைந்துள்ளது.

2009 அக்டோபர் 22-ம் திகதி Allstream Centre உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. கனடாவிலேயே பசுமையும், எரியத் திறனும் மிகுந்த மாநாட்டு மண்டபமாக அது விளங்குகிறது. ரொறன்ரோவை உலகிலேயே மிகவும் பசுமை வாய்ந்த மாநகரமாக மாற்றுவதற்கு உதவும் மாபெரும் சொத்து Allstream Centre.

allstreamcentre.com

**மாநகராதிபதி டேவிட் மிலர் உங்களை அழைக்கிறார்...**

குப்பை கூளங்களை அகற்றி, ரொறன்ரோ மாநகரத்துக்குப் பசுமையும், தூய்மையும், அழகும் ஊட்ட ஒருங்கிணைவீர்!

பின்வரும் திகதிகளைக் குறித்து வைத்திருக்கவும்:

ஏப்பிறில் 23, வெள்ளிக்கிழமை, மாலை 2 மணி – 20 நிமிடம் துப்புரவாக்கல்

ஏப்பிறில் 24, சனிக்கிழமை – மாநகராதிபதி டேவிட் மிலர் அவர்களின் சமூக துப்புரவு நாள்

Information/registration: toronto.ca/litter or call 311

## ரொறன்ரோ சமூகநல வதிவகங்களுக்குப் புத்துயிரூட்டல்

14 சமூகநல வதிவக சமூகங்களுக்குப் புத்துயிரூட்டும் நெடுங்காலத் திட்டம் ஒன்றை ரொறன்ரோ சமூகநல வதிவகத் துறை வகுத்துள்ளது. மேற்படி சமூகங்களுள் அடங்கும் 4,800 வீடுகளிலும் வசிப்பவர்களுடன் மாநகரப் பணியாளர்கள் கலந்துரையாடி, தலைசிறந்த அணுகுமுறையை நிச்சயிப்பதுடன் புத்துயிரூட்டல் திட்டம் ஒவ்வொன்றும் தொடங்கும்.

### றீஜன்ற் பார்க் (Regent Park)

மிகவும் பழைமை வாய்ந்த, பாரிய கனடிய சமூகநல வதிவக சமூகங்களுள் ஒன்றாகிய றீஜன்ற் பார்க் சமூகத்தை, ரொறன்ரோ சமூகநல வதிவகத் துறை, வெவ்வேறு பயன்பாடும் வருமானமும் கொண்டு களைகட்டும் சமூகமாக மாற்றியமைத்து வருகிறது. ஏற்கெனவே வேறு அகநகர அயல் எதையும் போலவே அது தென்படுகிறது, உணர்வூட்டுகிறது.

றீஜன்ற் பார்க் சமூகத்தில், 2,083 வீடுகளில் வசிக்கும் 7,500 பேர் 15 ஆண்டுகளில் 12,500 பேராகப் பெருகி 5,115 வீடுகளில் வசிப்பார்கள். சமூகநல, சிக்கன, சந்தை-விலை வீடுகள் என்று வேறுபடும் வீடுகளை அவர்கள் வாடகைக்கும், விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம். அருகில் மேலதிகமாக 375 புதிய சமூகநல வதிவகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

50 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ள தெருக்கள் மீண்டும் திறக்கப்பட்டு வருகின்றன. புதிய பொழுதுபோக்கு, நீச்சல், சிறார் மைய, மத்திய சோலை வசதிகள் உட்பட, புதிய கடைகண்ணி வசதிகளை மக்கள் துய்ப்பார்கள்.

### லோறன்ஸ் ஹைற்ஸ் (Lawrence Heights)

அடுத்த பாரிய மறுசீரமைப்பு: லோறன்ஸ் ஹைற்ஸ். ரொறன்ரோ சமூகநல வதிவகத் துறை அதற்கான பணியை மேற்கொண்டுள்ளது. இங்கு 24.28 ஹெக்டயர் காணியில் 3,500 குடியிருப்பாளர்களுக்காக வருமான விகித வாடகை வீடுகள் 1,208 மீட்டியமைக்கப்படும்.

சோலை விருத்தி, சிறந்த போக்குவரத்து வசதி, புதிய நடைபாதைகள், தெரு-இணைப்புகள், சமூகநல-பொழுதுபோக்குச் சேவைகள் அதிகரிப்பு, கல்வி-வேலைவாய்ப்பு-பயிற்சி வாய்ப்புகள் கொண்டு சமூகத்தை வலுப்படுத்துவதற்கு இது அடிகோலும்.

றீஜன்ற் பார்க் சமூகத்தில் சமூகநல, சிக்கன, சந்தை-விலை வீடுகள் என்று வேறுபடும் வீடுகளை வாடகைக்கும், விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

**உங்கள் சமூகத்தைக் காப்பதற்கு விருதுபெற்ற கருத்துகள் ஐந்து**

சமூகத்தின் பாதுகாப்பை நீங்கள் எண்ணிப் பார்க்கும்பொழுது போதனை, துடுப்பாட்டம், அயல் விருந்து, குறும் படங்கள், பட்டறைகள் என்பன உடனடியாக உங்கள் நினைவுக்கு வராது போகலாம். ஆனால் சமூகத்தின் பாதுகாப்பு என்பது காவல்துறையின் நடவடிக்கையை விட வேறு பல விதங்களிலும் ஒப்பேறும் என்பதை மாநகராதிபதியின் எட்டாவது ஆண்டு சமூக பாதுகாப்பு விருதுகளைப் வென்றவர்கள் எமக்கு உணர்த்துகிறார்கள். 2002-ம் ஆண்டு சமூக பாதுகாப்புச் செயலணி இவ்விருதுகளைத் தோற்றுவித்தது. வாழ்ந்து, கற்று, உழைத்து, விளையாடச் சிறந்த இடமாக ரொறன்ரோவை மாற்றும் திட்டங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது வென்ற பின்வரும் ஐந்து கருத்துகளுள் எதையும் தழுவி உங்கள் அயலவர்களை ஈடுபடுத்தி, உங்கள் பாதுகாப்பை நீங்கள் மேம்படுத்தலாம்:

1. பாடசாலை வேளைக்குப் பிந்திய நிகழ்திட்டம் ஒன்றைத் தொடங்கி, கல்வியைவிட மேலதிகமான விடயங்களை அறிவுறுத்தல். Glendower சமூகத்தில் கல்வி, நடத்தைப் பிரச்சனைகளுடன் போராடும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு Beyond Academics உதவுகிறது.

2. உள்ளூர் இளையோர்க்கு ஒரு புதிய விளையாட்டை அறிமுகப்படுத்தல். துடுப்பாட்டத்தின் பெயர் ஓங்கி ஒலிக்கிறது. Central Park Youth Sports Club அத்தகைய துடுப்பாட்டத்தைப் பயன்படுத்தி Regent Park இளையோரை ஒரு சுமுகமான சூழ்நிலையில் ஒருங்கிணைத்துள்ளது.

3. இலைமறைகாய்போல் இருக்கும் திறமையைக் கண்டறிந்து, ஆற்றுப்படுத்தல். Film Stars நிறுவனம் உள்ளூர்ச் சமூகத்துடன் இணைந்து உள்ளூர் இளையோர்க்கு திரைப்படக்கலையைப் புகட்டி வருகிறது.

4. உங்கள் அயலவர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தல். வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்ட ஒரு குழுமம் Lawrence Heights Friday Night Café எனப்படும் வாராந்த குடும்ப ஒன்றுகூடல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

5. உங்கள் சமூகத்தவர்களை வரைவழைத்து, பாதுகாப்பில் கருத்தூன்றிப் பட்டறைகளை நடத்துதல். University Settlement எனப்படும் குழுமம் Safe Community Initiative என்பதை உருவாக்கியது. ரொறன்ரோ மேற்கு அகநகரில் தனியே சமூக பாதுகாப்பில் கருத்தூன்றி நான்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விருது வென்ற ஒவ்வொருவருக்கும் மாநகராதிபதி டேவிட் மிலரின் ஒப்பத்துடன் கூடிய ஏற்புச் சான்றிதழும், ஒவ்வொருவரும் தொடங்கிய பணியைத் தொடர்வதற்கு உதவியாக Bell Canada அளித்த $1,000 நன்கொடையும் வழங்கப்பட்டன. மாநகராதிபதியின் ஒன்பதாவது ஆண்டு சமூக பாதுகாப்பு விருதுகளுக்கான பெயர்மொழிவுகள் அடுத்த இலையுதிர்ப் பருவத்தில் ஏற்கப்படும்.

toronto.ca/safetyawards

**25 ஆண்டுகள் உயிர்காப்புச் சேவை**

ஆண்டுதோறும் ரொறன்ரோ மாநகர வாசிகளும், இங்கு வந்து செல்வோரும் தொலைபேசி வாயிலாக அவசர மருத்துவ சேவை (EMS) நாடி 235,000 தடவைகளுக்கு மேல் அழைக்கிறார்கள். 2009 ஐப்பசி மாதம் ரொறன்ரோ உயர்தர உயிர்காப்பு உபசிகிச்சையாளர் நிகழ்வகம் (TALSPP) அதன் 25-வது ஆண்டுநிறைவை ரொறன்ரோவில் கொண்டாடியது. அதில் கலந்துகொண்டவர்களுக்கு உரையாற்றிய EMS தலைமை அதிகாரி Bruce K. Farr, "இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நோயளரை ஏற்றியிறக்கும் துறையில் ஒரு புதிய ஊழி மலர்ந்ததை நான் கண்ணுற்றேன். வைத்தியசாலையில் இடம்பெறும் அவசரசேவையை ரொறன்ரோ மாநகர வீடுகளிலும், தெருக்களிலும் மேற்கொள்ளும் சேவை இது" என்று குறிப்பிட்டார்.

torontoems/ca

**ரொறன்ரோ காவல்துறை இணைப்புகள்**

உங்கள் அயல் விபரம் அறிய, பதியவும்

*ரொறன்ரோ காவல்துறை இணைப்புகள்* என்பது ஒரு புதிய சமூக தன்னிகழ் அறிவிப்பு முறைமை. ரொறன்ரோ மாநகர வாசிகளுக்கும் தொழிலக உடைமையாளர்களுக்கும் இன்றியமையாத தகவல்களை அது வழங்கி வருகிறது. ரொறன்ரோ காவல்துறை அதனை இயக்கி வருகிறது. நுட்பமான மென்பொருள்களைக் கொண்டு குறிப்பிட்ட இடங்களுக்கு அது தகவல் அனுப்பி வருகிறது. ஓர் இடத்தில் சேவை பெற ஒப்பத்தொகை செலுத்தியோரும் தொழிலகங்கத் தரப்பினரும் ஏற்ற வேளைகளில் ரொறன்ரோ காவல்துறையிடமிருந்து தகவல் பெறுவார்கள்.

அத்தகைய தகவல்களுள் அடங்கக்கூடியவை வருமாறு: விசேட நிகழ்ச்சிகள், சமூக கூட்டங்கள், தெரு மறிப்புகள், பாடசாலை பூட்டப்படல், விபத்து அறிவிப்புகள், காணாமல் போவோர் பற்றிய அறிவிப்புகள், வெளியேற்றல், சந்தேகநபர்கள் பற்றிய அறிவிப்புகள். ரொறன்ரோ காவல்துறையின் உள்ளூர்ப் பகுதிகளைச் சேர்ந்த அதிகாரிகள் தொலைபேசி, குறுங்குறிப்பு மூலம் தகவல் தெரிவிப்பார்கள்.

இதன் பதிவுப் பக்கத்தில், சம்பந்தப்பட்ட சமூகத்தவர் எவரும் தமது விபரத்தை இட வசதி உண்டு. தான் நாடும் தகவல்களையும், நாடாத தகவல்களையும் அதில் அவர் சுட்டிக்காட்டலாம். தொலைபேசி மூலமாகவா, மின்னஞ்சல்-குறிப்பு மூலமாகவா தகவல் பெற விரும்புகிறார் என்பதையும் அவரே தீர்மானிக்கலாம். எந்த வேளையிலும் தனது விபரத்தை அவர் மாற்றலாம் அல்லது பதிவகற்றலாம்.

*ரொறன்ரோ காவல்துறை இணைப்புகள்* பற்றிய மேலதிக விபரங்களுக்கு அல்லது பதிவுக்கு எமது இணையத்தளத்தை நாடவும்.

tpslinks.ca

**ரொறன்ரோ நகரசமூக இணையப் பக்கம் 101 வெற்றிகரமாகச் செயற்படுகிறது**

மாநகர முடிபுகள், நிதிவளம், தேர்தல், திட்டமிடல் பற்றிய அறிமுக விபரங்களை நகரசமூக இணையப் பக்கம் 101 வழங்கி வருகிறது. கடந்த இலையுதிர்ப் பருவத்தில் ரொறன்ரோ வாசிகள் 175 பேர் ஆறு அமர்வுகளில் கலந்துகொண்டு, தமது மாநகராட்சி பற்றி அறிந்துகொண்டார்கள். இணைய வாயிலாக அறிய விரும்புவோர்க்கு, மேற்படி அமர்வுத் தொடர்களில் பயன்படுத்தப்பட்ட ஒளிநாடாக்கள், விளக்கவுரைகள், பின்புல வளங்கள் கிடைக்கும். 2010-ல் புதிய வெளியீடுகள் இடம்பெறும். பொதுமக்கள் தமது அயற்புறங்களையும், சமூகங்களையும், மாநகரத்தையும் எளிதில் புரிந்துகொள்ளவும், உருப்படுத்தவும் அவை உதவும்.

ரொறன்ரோ நகரசமூக இணையப் பக்கம் 101, மாநகர கலந்துரையாடல்கள், பொது நியமனங்கள், கூட்டங்கள் பற்றிய விபரங்களுக்கு நகரசமூக இணையப் பக்கத்தை நாடவும்.

toronto.ca/civic-engagement
or call 311

**மின்னஞ்சல்/சிட்டஞ்சல் மூலம் புதுவிபரம் – ரொறன்ரோ மாநகர நிகழ்திட்டங்கள், சேவைகள், முன்முயற்சிகள் பற்றிய புதுவிபரம் பெற ஒப்பத்தொகை செலுத்திப் பதிவுசெய்யவும்**

தற்பொழுது ஒப்பத்தொகை செலுத்திக் கிடைக்கப்பெறும் புதுவிபரங்கள்: ரொறன்ரோவே கொண்டாடு! (Celebrate Toronto!) மாநகர புதுவிபரம் - ரொறன்ரோ மாநகர மின்னஞ்சல் மடல் (City Update – the City of Toronto's e-newsletter), உந்துருளி உலா விபரம், அவசர-பெருஞ்சம்பவ விபரம், செய்தி வெளியீடுகள். உங்கள் மின்னஞ்சல்வரி அந்தரங்கமாகவே வைக்கப்படும். வேறு நோக்கங்களுக்கு அது பயன்படுத்தப்பட மாட்டாது. ஒப்பத்தொகை செலுத்திப் பதிவுசெய்வதற்கு நாடவும்: toronto.ca/e-updates. மேலதிகமாகச் சேர்க்கப்படவுள்ள நிரல்களை அறிவதற்குத் தொடர்புகொள்ளவும். சிட்டஞ்சல் வாயிலாகவும் மாநகர விபரங்களை நீங்கள் அறிந்துகொள்ளலாம்: twitter.com/TorontoComms.

**ரொறன்ரோ குறிப்பெடுப்பு நூலகம் சிறந்து விரிவடைகிறது**

கனடாவில் உள்ள ஒரோயொரு பொது குறிப்பெடுப்பு நூலகம் ரொறன்ரோ குறிப்பெடுப்பு நூலகமே (Toronto Reference Library). அதுவே ரோறன்ரோவில் உள்ள 99 பொது நூலகக் கிளைகளுள் மிகவும் பெரியது. ஆண்டுதோறும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இங்கு வந்து போகிறார்கள். இது ரொறன்ரோவில் அனைவரும் பயன்படுத்தவல்ல ஓர் அரிய கருவூலம் ஆகும்.

ரொறன்ரோ குறிப்பெடுப்பு நூலகம் தற்பொழுது சிறந்து விரிவடைந்து வருகிறது. மக்கள் முக்கிய திரட்டுகளையும், தகவல்களையும் மேன்மேலும் பயன்படுத்த வழிவகுக்கப்படும். கற்பதற்கும், சுயவழிகாட்டியுடன் கற்பதற்கும் இடவசதி விரிவாக்கப்படும். The Bram & Bluma Appel Salon எனப்படும் புதிய அதிநவீன நிகழ்ச்சிக் கூடம் ஒன்று இலையுதிர்ப் பருவத்தில் திறந்துவைக்கப்பட்டது.

“இந்த நூலகம் ஒரு மாபெரும் அறிவுக் கருவூலம். ஆளுநர் அதிபதி வகிக்கும் பங்கு பற்றி இங்கு நான் ஆராய்ச்சி செய்தேன். நீங்களும் அப்படிச் செய்யலாம். அல்லது நீங்கள் கண்ணுறும் குடிசையில் காணப்படும் பாறைகள் என்ன வகையானவை என்பதை இங்கு உலவியபடியே நீங்கள் கண்டறியலாம்” என்று முன்னாள் கனடிய ஆளுநர் அதிபதி அதிமாண்புமிகு அட்றியன் கிளார்க்சன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

$34 மில்லியன் செலவில் இது கட்டம் கட்டமாக சீரமைக்கப்பட்டு வருகிறது. சீரமைப்பு இடம்பெறுகையில் நூலகம் திறந்தே இருக்கும். சீரமைக்கும் திட்டத்துக்கு ரொறன்ரோ மாநகரம் ($14 மில்லியன்), ஒன்ராறியோ அரசாங்கம் ($10 மில்லியன்), கனடிய அரசாங்கம் ($3 மில்லியன்) நிதியுதவி புரிந்துள்ளன. நிதி திரட்டும் தனியார் துறை அமைப்பாகிய ரொறன்ரோ பொது நூலக நிறுவகத்தின் *re:vitalize - Toronto Reference Library Campaign* இயக்கம் 2009 வசந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

torontopubliclibrary.ca
revitalizeTRL.ca
or call 416-393-7131

**வெற்றிக் கதை: தெருவாழ்வுமுதல் அகவாழ்வுவரை**

தெருவாழ்வு வாழ்வோர் நேரே அகவாழ்வு சேர்வதற்கு *தெருவாழ்வுமுதல் அகவாழ்வுவரை* நிகழ்திட்டம் உதவுகிறது. இதன்படி சம்பந்தப்பட்டவரின் விடயம் தீவிரமான முறையில் கையாளப்படும். முன்னர் வதிவகம் அற்றவர்கள், உளநலச் சிக்கல் கொண்டவர்களும் போதைநுகர்வுக்கு அடிமைப்பட்டவர்களும் கூட, தகுந்த உதவிகளுடன் வெற்றிகரமாக வதிவகம் பேண வல்லவர்கள் என்பதை ஆராய்ச்சியும், அனுபவமும் உணர்த்துகின்றன. *முதலில் வதிவகம்* எனப்படும் அணுகுமுறையின் அடிப்படை இதுவே. ரொறன்ரோ மாநகரத்தில் வதிவகமின்மை, வதிவக உடைமை என்பவற்றை உள்ளடக்கிய சேவைகள், நிகழ்திட்டங்கள் அனைத்துக்கும் இதுவே நிலைக்களம்.

இந்நிகழ்திட்டம் 2,800-க்கு மேற்பட்டோருக்கு உதவியுள்ளது. அவர்களுள் அநேகர் தமது புதிய வதிவகங்களிலேயே தங்கியிருக்கிறார்கள். நிகழ்திட்ட உதவியுடன் வதிவகங்களில் தங்கியிருப்பவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டு வருகிறது. தமது உடல்நலமும் உளநலமும் மேம்பட்டு, தாம் பத்திரமாக, நல்லுணவுண்டு, மதுவகை-போதைப்பொருள் நுகர்வு குறைத்து, இணக்கமான எதிர்காலக் கண்ணோட்டம் கொண்டு வாழ்வதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மக்களுக்கு வதிவகம் அளிப்பதால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது. அது மாத்திரமல்ல, வதிவகமின்மைக்கு அது ஒரு சிக்கனமான தீர்வாகவும் அமைகிறது. மக்களை வதிவகத்தில் இட்டதும், அவர்கள் செலவுக்கிடமான அவசர சேவைகளை நாடுவது குறைகிறது. தமது தேவைகளுக்கு மிகவும் உகந்த சுகாதார, சமூக சேவைகளை அவர்கள் நாடத் தொடங்குகிறார்கள். அதனால் (வைத்தியசாலைகளில் உள்ள அவசரசேவைக் கூடங்கள், நோயாளர் ஊர்திகள், காவல்துறை போன்ற) வேறு சேவைகளுக்காகும் செலவு மீதப்படுகிறது. அதனைக் கொண்டு *தெருவாழ்வுமுதல் அகவாழ்வுவரை* நிகழ்திட்டத்துக்கான செலவில் ஒரு குறிப்பிடத்தக்க தொகையை ஈடுசெய்ய முடிகிறது.

toronto.ca/housing

**வரவு-செலவுத் திட்டம் 2010 – மிகவும் குறைந்த வரிகள், சிறந்த சேவைகள், மகத்தான மாகரம்**

பெப்ரவரி 16-ம் திகதி வரவு-செலவுத் திட்டக் குழு முன்னிலையில் மாநகர முகாமையாளரும், தலைமை நிதி அதிகாரியும் 2010-ம் ஆண்டுக்கென விதந்துரைத்த ரொறன்ரோ மாநகர செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபொழுது மாநகராதிபதி டேவிட் மிலர் அங்கு உரையாற்றினார். மாநகராதிபதியின் உரையில் ஒரு கூறு பின்வருமாறு. அவரைப் பொறுத்தவரை வரவு-செலவுத் திட்டத்தின் 10 முக்கிய விடயங்கள் இதில் அடங்கியுள்ளன. எல்லா மாநகரவாசிகளும், தொழிலகங்களும் அவற்றை அறிந்திருக்க வேண்டும்…

"ரொறன்ரோ மாநகர வரவு-செலவுத் திட்டம் என்பது வெறுமனே ஓர் ஐந்தொகை அல்ல. இந்த மாநகரவாசி ஒவ்வொருவருக்கும் வாழ்வும், வளமும், வாய்ப்பும் அளிக்கும் மாநகரமாக ரொறன்ரோவை மாற்றுவதற்கு வேண்டிய நிகழ்திட்டங்களையும், சேவைகளையும் மேற்கொள்வதற்கு நாம் பயன்படுத்தும் திட்டமே இந்த வரவு-செலவுத் திட்டம்.

எதிர்வரும் கிழமைகளில் இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றியும், மாநகர நிதிவளம் பற்றியும் விரிவான கலந்துரையாடல் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

**பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டே இம்மாநகர வரவு-செலவுத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற வேண்டும்:**

1. பாரிய ரொறன்ரோ பிராந்தியம் முழுவதிலும் ரொறன்ரோவிலேயே மிகவும் குறைந்த வீட்டு ஆதன வரி விதிக்கப்படுகிறது.

ஆண்டுக்கு (சராசரியாக) $93 அதிகரிப்பு செய்வது என்னும் முன்மொழிவு நியாயமானது, மிதமானது என்று நான் நம்புகிறேன். அதேவேளை இந்த மாநகர கொண்டமனை அல்லது வீடொன்றில் வசிப்பவர் என்றால், பாரிய ரொறன்ரோ பிராந்தியம் முழுவதிலும் ஒத்த பெறுமதி வாய்ந்த ஆதனத்துக்குச் செலுத்தப்படும் வீட்டு ஆதன வரியைவிடக் குறைந்த வரியையே நீங்கள் செலுத்துவீர்கள்.

2009-ம் ஆண்டு ரொறன்ரோவில் ஒரு சராசரி வீட்டின் கணிப்பிட்ட பெறுமதி: $387,680.

ரொறன்ரோவில் இந்த வீட்டு உடைமையாளர் வீட்டு ஆதன வரியாக $2,334 - அன்றாடம் $6.39 செலுத்தினார்.

மிசிசாகாவில் அத்தகைய வீட்டு உடைமையாளர் $2,559 ஆதன வரி – $225 அதிக ஆதன வரி செலுத்தினார்.
மார்க்கத்தில் அத்தகைய வீட்டு உடைமையாளர் $3,037 ஆதன வரி – $703 அதிக ஆதன வரி செலுத்தினார்.
வோனில் அத்தகைய வீட்டு உடைமையாளர் $3,314 ஆதன வரி – $1,000 அதிக ஆதன வரி செலுத்தினார்.

இது தெளிவான விடயம்: ரொறன்ரோவில் உங்களுக்கு சொந்த வீடு அல்லது கொண்டமனை இருந்திருந்தால், 2009-ம் ஆண்டில் ரொறன்ரோ பிராந்தியம் முழுவதிலும் மிகவும் குறைந்த வீட்டு ஆதன வரியையே நீங்கள் செலுத்தியிருப்பீர்கள்.

2. எங்கள் மாநகரம் ஒரு காருண்ய சமூகம். இங்கு இக்கட்டு மிகும் வேளைகளில் மக்கள் ஒருவருக்கொருவர் துணைநின்று வருகிறார்கள்.

மக்கள் தமது வீட்டை வைத்திருக்கவும், வேலைவாய்ப்புப் பெறவும் உதவும் நடவடிக்கைகள் பலவற்றை Toronto Helps நிகழ்திட்டத்துக்கமைய இம்மாநகராட்சி மன்றம் கடந்த ஆண்டு மேற்கொண்டது.

முதியோர், வலுதளர்ந்தோர் பலருக்கும் ஆதன வரி உதவி நிகழ்திட்டங்கள் மூலம் நாங்கள் துணைநின்றோம்.

3. 2006-ம் ஆண்டின் பின்னர் இம்மாநகராட்சி மன்றம் தொழிலக வரிவகைகளை $190 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையினால் குறைத்துள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், மேற்படி தொகை $250 மில்லியனுக்கு மேற்படும்.

4. உள்ளூர் வாரியாகப் பொருளாதாரத்துக்கு உந்துவிசை அளிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

கடந்த இரு ஆண்டுகளாக கட்டுமான விருத்தித் துறைக்கு உதவும்பொருட்டு கட்டுமான விருத்திக் கட்டணங்களை நாங்கள் நிலைநிறுத்தி வைத்துள்ளோம். தற்போதைய பொருளாதார பின்னடைவினால் பாதிக்கப்பட்ட கட்டுமான விருத்தித் துறையினருக்கு ஏற்பட்டுவந்த செலவை அது குறைத்தது.

தொழிலகத் துறைக்கும், பொருளாதாரத்துக்கும் துணைநிற்பதற்கு மாநகரம் அளிக்கும் அதிமுதன்மையை இந்நடவடிக்கைகள் அனைத்தும் ஒருசேர உணர்த்துகின்றன.

அத்துடன், Invest Toronto, Build Toronto என்னும் முக்கிய கூட்டுத்தாபனங்கள் இரண்டையும் நாங்கள் புதுக்கத் தோற்றுவித்துள்ளோம். எங்கள் முயற்சிகள் இரட்டிக்கவும், இப்பிராந்தியம் முழுவதும் பயனடையும் வண்ணம் பெறுபேறுகள் கிடைக்கவும் அவை வழிவகுக்கும்.

5. நிகழ்திட்டங்களுக்கு ரொறன்ரோ விதிக்கும் பயனாளர்-கட்டணங்கள், சம்பந்தப்பட்ட சேவையை மேற்கொள்வதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை மாத்திரம் இறுப்பதற்கே போதுமானது.

உண்மையில், சம்பந்தப்பட்ட நிகழ்திட்டத்துக்கு ஆகும் செலவில் ஏறக்குறைய 30 விழுக்காட்டை இறுப்பதற்கு மாத்திரமே பயனாளர்-கட்டணங்கள் போதுமானவை.

ரொறன்ரோ மாநகரம் அறவிடும் கட்டணங்கள், சூழவுள்ள மாநகரங்கள் அறிவிடும் கட்டணங்களுக்கு ஈடுகொடுப்பவை, இசைவானவை.

மாநகரத்தின் மொத்த வருமானத்துள் பயனாளர்-கட்டணங்கள் 15 விழுக்காடு மாத்திரமே. எனினும் இந்தப் பணம் இல்லாவிட்டால், இன்று விளங்குவதுபோல் ரொறன்ரோவை ஒரு மகத்தான மாநகரமாக்குவதற்கு ஏதுவான நிகழ்திட்டங்களை எம்மால் மேற்கொள்ளவியலாது.

6. முந்திய வரவு-செலவுத் திட்டங்களைப் போலுவே இந்த ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்திலும் செலவுக் கட்டுப்பாடு, வினைத்திறன், சில நெகிழ்த்திய சேவைகள் அடங்கியுள்ளன. மக்கள் நாடும் சேவைகள் அவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.
இந்த ஆண்டு வேலைநிறுத்தத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஓர் இணக்கத்தின்படி சம்பளக் கட்டுப்பாடு புகுத்தப்பட்டது. வேலைநிறுத்தத்துக்கு முன்னர் கோரப்பட்ட சம்பளத்தைவிட மிகவும் குறைந்த சம்பள அதிகரிப்புக்கு இணங்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டு உடன்படிக்கையில் இடம்பெற்றுவந்த நோய் விடுப்பு உதவிப்படியை அகற்றுவதற்கு மாநகரம் பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிபெற்றது.

அத்துடன், முகாமையாளர்கள், தொழிற்சங்கம் சாராத பணியாளர்கள் ஆகியோரின் சம்பளத்தைக் கட்டுப்படுத்தி, கணிசமான செலவை மாநகரம் தொடர்ந்து மீதப்படுத்தி வந்துள்ளது, மீதப்படுத்தி வரும்.

2010-ம் ஆண்டுக்கான எமது வரவு-செலவுத் திட்டத்தை நாம் அவதானம், மதிநுட்பம், சம்பளக் கட்டுப்பாடு, 4 % வீட்டு வரி அதிகரிப்பு, 1.3 % தொழிலக உடைமை வரி அதிகரிப்பு கொண்டு சமப்படுத்தி வருகிறோம் (2009-ம் ஆண்டின் சம்பளக் கட்டுப்பாடு கொண்டு 2010-ல் சமப்படுத்த முடிகிறது). இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமப்படுத்துவதற்கு, பயனாளர் கட்டணங்களும், TTC கட்டண அதிகரிப்புகளும், ஈராண்டுகளுக்கு முன்னர் ஒன்ராறியோ மாகாணம் ஆரம்பித்த செலவுப்பொறுப்பேற்பும் உதவுகின்றன.

7. நிதிக் கட்டமைப்பு நெருக்கடி ஒன்றையும் மாநகரம் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.

இம்மாநகரம் ஒருங்கிணைக்கப்பட முன்னர் பல தசாப்தங்களாகப் போக்குவரத்துச் சேவையை இயக்குவதற்கு அளித்த நிலைபெற்ற நிதியுதவியை மாகாணம் மீண்டும் அளிக்க வேண்டும் என்பதில் மாநகரம் நாட்டம் கொண்டுள்ளது.

2011 அரசிறை ஆண்டு முதல் இம்மாநகரத்தில் போக்குவரத்துச் சேவையை இயக்குவதற்கு நிலைபெற்ற நிதியுதவியை ஈட்டும் நோக்குடன் 2010 திசம்பர் 1-ம் திகதிக்கு முன்னர் *ரொறன்ரோ – ஒன்ராறியோ ஒத்துழைப்பு உடன்படிக்கை* ஒன்றைச் செய்வதற்கு நாங்கள் ஒன்ராறியோ மாகாணத்துடன் சேர்ந்து பாடுபடுவோம்.

போக்குவரத்துச் சேவை மிகவும் முக்கிய சேவை. அதற்காகும் செலவை அவ்வப்பொழுதோ, ஆண்டிறுதியிலோ, தற்காலிக நிதியுதவி கொண்டோ இறுக்கலாம் என்று கருதி நாம் வாளாவிருக்க முடியாது. ரொறன்ரோ மாநகரின் வருங்காலத்தைப் பொறுத்தவரை TTC மிகவும் முக்கியமானது. ஆண்டுதோறும் ஈடாடும் நிதியுதவிக்கு அதனை நாம் இரையாக்க முடியாது.

8. மாநகரரின் படுகடன் தொகையுள் ஒரு பாகத்தை இறுப்பதற்கான காலத்தை நீடிப்பதற்கு அது நடவடிக்கை எடுத்துள்ளது.

படுகடன் இறுக்கும் முறைமையை மறுசீரமைத்து எமது செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டத்துக்கான செலவை இந்த ஓராண்டிலேயே நாம் $33 மில்லியனால் குறைத்துள்ளோம்.

எமது செயற்பாட்டு வரவு-செலவுத் திட்ட இக்கட்டை எதிர்கொள்ளும் அதேவேளை, மாநகரத்தின் செவ்விய நாணயநிலையைப் பேணுவதற்கு வேண்டிய நெகிழ்ச்சியையும் இந்த உபாயம் எமக்குத் தந்துதவுகிறது.

9. மாநகரச் சொத்துகளின் விற்பனை அல்லது நவீனமயமாக்கம் எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்துள் அடங்கவில்லை.

ரொறன்ரோ மாநகரத்தின் நெடுங்கால நன்னலனுக்காகவே அத்தகைய நடவடிக்கை எதுவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். என்றுமே செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டத்துக்கான செலவுப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு அவ்வாறு செய்யக் கூடாது.

10. ஒரு மகத்தான மாநகரத்தை எம்மால் இலவசமாக எய்த முடியாது.

உங்கள் வரியை நிலைநிறுத்தி அல்லது குறைத்து, பின்வருவன போன்ற, எமக்கு இன்றியமையாத 24 மணித்தியால சேவைகளை மேற்கொள்ளலாம் என்று யாராவது உங்களிடம் கூறினால், அவர் உங்களிடம் முழுவிபரமும் தெரிவிக்கவில்லை என்பதே பொருள்:

• மிகவும் நலிபடவல்ல எமது சமூகத்தவர்களுக்கு உதவுதல்

• பொது போக்குவரத்துச் சேவை

• அவசர சேவைகள்

• குற்றச் செயல்கள் தொடர்ந்து குறையுந்தோறும் பத்திரமான சமூகங்கள்

• சூழல் காத்தல்

இவையே எனது முக்கிய வரவு-செலவுத் திட்ட விடயங்கள் 10. இவற்றுள் முதலாவதும், கடைசியுமே மிக முக்கியமானவை: பாரிய ரொறன்ரோ பிராந்தியம் முழுவதிலும் ரொறன்ரோவிலேயே மிகவும் குறைந்த வீட்டு ஆதன வரி விதிக்கப்படுகிறது; ஒரு மகத்தான மாநகரத்தை எம்மால் இலவசமாக எய்த முடியாது.

இடம்பெறவுள்ள விவாதத்தைச் செவிமடுக்கும் வேளையில் மேற்படி பத்து விடயங்களையும் நாங்கள் உள்ளத்தில் பதிக்க வேண்டிய ஆண்டு இதுவே.

மாநகர வரவு-செலவுத் திட்டம் பற்றியும், நிதிவளம் பற்றியும் வினவும் வேளையில் நாங்கள உள்ளத்தில் பதிக்க வேண்டிய விடயங்கள் இவையே.

ஒரு மகத்தான மாநகரத்தைக் கட்டியெழுப்பவதற்கு நாம் அனைவரும் உறுதிபூண்டு, ஒத்துழைத்து, தியாகம் புரிய வேண்டும்.

மேற்படி சிறப்புகள் அனைத்தும் ஒருமிக்கும் வேளையில் கைகூடவல்ல மகத்தான காட்சிக்குச் சான்று பகரும் பேறு எனக்குத் தொடர்ந்து கிடைத்து வந்துள்ளது.”




*மாநகர ஆதன உரித்துமாற்ற வரி/சுய ஊர்தி வரி

**வேறு வருமானம்: வாடகை உடைமை, வட்டி வருமானம், முதலீட்டு வருமானம், நன்கொடைகள், ஊர்திக்கள உதவிதொகை, வேறு சொத்து விற்பனை, காப்புறுதி இழப்பு மீட்பு, அபராதம், அனுமதிச்சீட்டுகள், உரிமங்கள்

**2010-ம் ஆண்டுக்கு விதந்துரைக்கப்படும் செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டம்**
**2010-ல் உங்கள் வரிப்பணம் உங்களுக்கு பயன்படும் விதம்**




*வேறு: சிக்கன வீட்டு அலுவலகம், நீதிமன்ற சேவை, பொருளாதார விருத்தி-பண்பாடு, சமூக விருத்தி நிதி – நிரவாகம், 3-1-1 வாடிக்கையாளர் சேவைத் திட்டம், கொள்கை, திட்டமிடல், நிதி-நிருவாகம், தொழினுட்ப சேவை, ரொறன்ரோ சூழல் அலுவலகம், நீர்முகச் செயலகம், தலைமை நிதி அதிகாரியின் அலுவலகம், பொருளாளரின் அலுவலகம், நிலையங்கள் - ஆதனத்துறை, ஊர்தியணிச் சேவை, மாநகர முகாமையாளரின் அலவலகம், மாநகர எழுதுநரின் அலுவலகம், சட்டவியற் சேவை, மாநகராதிபதியின் அலுவலகம், கணக்காய்வாரள் அதிபதியின் அலவலகம், நேர்மைநெறி ஆணையாளரின் அலுவலகம், அரசியலணைவுப் பதிவாளர், முறைகேள் அதிகாரியின் அலுவலகம், மற்றும் பிற நிகழ்திட்டம் சாராதவை (படுகடன் கட்டணம், சமூக கூட்டுறவு-முதலீட்டு நிகழ்திட்டம் தவிர்ந்தவை).

**மாநகரத்தின் 2010-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்: பின்வருவனவற்றை நீங்கள் அறிந்ததுண்டா?**

1.

முன்னர் TTC சேவையை நடத்துவதற்கான செலவை ரொறன்ரோ மாநகரமும், ஒன்ராறியோ மாகாணமும் 50-க்கு 50 பகிர்ந்து வந்தன. இப்பொழுது ஆண்டுதோறும் மாநகர, மாகாண செலவுப் பங்குகள் இரண்டையும் தொடர்ந்து இறுப்பது, மாநகர செயற்பாட்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பாதிக்கும் மிகமுக்கிய பிரச்சனை ஆகும்.

2.

மாநகர வரவு-செலவுத் திட்ட நிர்ப்பந்தங்களை எதிர்கொண்டு, தற்போதைய பொருளாதார பின்னடைவைக் கருத்தில் கொண்டு தொழிற்சங்கம் சார்ந்த, சாராத பணியாளர்களின் வேதனம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2009-ல் முகாமைப் பணியாளர்களின் வாழ்க்கைச் செலவுப் படி உயரவில்லை. 2010-ல் அவர்களின் வாழ்க்கைச் செலவுப் படி, 1 விழுக்காடு உயரும். மூன்று ஆண்டுகளில் வாழ்க்கைச் செலவுப் படியை ஏறத்தாழ 6 விழுக்காடு அதிகரிப்பதற்கும் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்தத்தில் நிலைபெற்ற நோய்-விடுப்பு உதவிப்படியை அகற்றுவதற்கும் மாநகரம், தொழிற்சங்கம் இரண்டும் உடன்பட்டன.

3.

மாநகர காணி உரித்துமாற்று வரி, ஊர்திப் பதிவு வரி மூலம் கிடைக்கும் பணம், மாநகர வருமானத்துள் சிறிதளவே ஆகும். எனினும் மாநகர அவசர வைத்திய சேவை, நெடுங்காலப் பராமரிப்பு அகங்கள் - சேவைகள் சார்ந்த நிகழ்திட்டங்களை மேற்கொள்வதற்கான செலவை இறுப்பதற்கு அது போதுமானதே.

4.

சமூகநல உதவிப்படி போன்ற மாகாண நிகழ்திட்டங்களில் தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கை பெருகுந்தோறும் அவர்களுக்கான சேவைகளை மேற்கொள்வதற்கு மாநகரம் இறுக்கும் செலவும் பெருகி வருகிறது. சேவை நியமங்களை மாகாணமே விதிக்கிறது. அவற்றுக்கான செலவை மாநகரங்களே இறுக்க வேண்டியுள்ளது.

**ரொறன்ரோ மாநகரின் நாட்பட்ட நீர்-வழங்கல் சேவையை சீரிடல்**

உங்கள் நீர்க்குழாய் முனையை நீங்கள் திருப்பும்பொழுது, உங்கள் வீட்டுக்கு நீர் கொணரும் 15,000 கிலோமீட்டர் நிலத்தடிக் குழாய்களையோ, 470,202 நீர்ச்சேவை இணைப்புகளையோ, 18 நீர்-இறைக்கும் நிலையங்களையோ நீங்கள் எண்ணத்தில் கொள்ளாதிருக்கலாம். எனினும் ரொறன்ரொ மாநகரவாசிகள் ஆண்டுதோறும் பயன்படுத்தும் 405,000 மெகாலீட்டர் நீரை வழங்குவதற்கு பெருமளவு அடிப்படைக் கட்டமைப்பு தேவை என்பதே உண்மை.

பெருநீர்க்குழாய்களையும், நீருடன் தொடர்புறும் மற்றும் பிற அடிப்படைக் கட்டமைப்பையும் நன்கு செயற்படும் நிலையில் வைத்திருப்பது என்பது உலக மாநகரங்களைப் பொறுத்தவரை ஒரு மாபெரும் அலுவல் ஆகும். மாநகரத்துக்கு நீர் வழங்கும் பெருநீர்க்குழாய்களைப் பழுதுபார்த்து, பேணுவதில் ரொறன்ரோ நீர் வழங்கல் துறை (Toronto Water) தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்த ஆண்டில் ரொறன்ரோ நீர் வழங்கல் துறை பின்வருவன உட்பட 600-க்கு மேற்பட்ட வெவ்வேறு திட்டங்களை மேற்கொள்ளும்.

• F. J. Horgan Water Treatment Plant விரிவாக்கம் – 1960 சொச்ச ஆண்டுகளுக்குப் பின்னர் மாநகரம் மேற்கொள்ளும் முதலாவது விரிவாக்கம் இதுவே. இதன் பெறுபேறாக இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் அன்றாடம் வழங்கும் குடிநீரின் அளவு 570 மில்லியன் லீட்டரிலிருந்து 800 மில்லியன் லீட்டர் வரை உயரும்.

• வீட்டுக் கீழ்த்தளத்தில் நீர் சுவறல் நிவாரணம் – இந்த நிகழ்திட்டத்தின்படி வீட்டுக் கீழ்த்தளத்தில் நெடுங்காலமாக நீர் சுவறும் பகுதிகளில் கழிகால்-குழாய்களும், பெருநீர்க்குழாய்களும் மாற்றப்படும். தொடக்க வேலை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு அது தொடரும்.

• ஈய நீர்க் குழாய் மாற்றும் நிகழ்திட்டம் – இந்த நிகழ்திட்டத்தின் மூலம், ஈயக் நீர்க் குழாய்கள் அனைத்திலும் மாநகரத்துக்குரிய பாகம் 9 ஆண்டுகளில் மாற்றப்படும்.

• ஈரலிப்புக்கால பாய்ம மூலத்திட்டம் (Wet Weather Flow Master Plan) – இது 2003-ல் ஆரம்பிக்கப்பட்டது. மழையும், உருகும் பனியும் எமது தாவர-உயிரின சூழலிலும், நீர்ப்பிரிநிலங்களிலும் ஏற்படுத்தும் பாதிப்பைக் குறைத்து, ஈற்றில் ஒழிக்கும் நோக்குடன் வகுக்கப்பட்ட 25 ஆண்டுத் திட்டம்.

• Coxwell Trunk Sewer அவசர பழுதுபார்ப்பு – இது இம்மாநகரத்தின் பெரிய கழிகால்-குழாய்க் கட்டுக்கோப்பின் ஒரு பிரிவில் இடம்பெறும் அவசர பழுதுபார்ப்புகள், பரிசோதனை, 500-மீட்டர் நீளமான மாற்றுப்பொருத்துக் குழாய் பதிப்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

• பெருநீர்க்குழாய், கழிகால்-குழாய் சீரமைப்பு – அடுத்த ஆண்டில் இம்மாநகரம் முழுவதும் 90 கிலோமீட்டரை விஞ்சிய நாட்பட்ட பெருநீர்க்குழாய்களும், கழிகால்-குழாய்களும் மாற்றப்படும்.

ரொறன்ரோ மாநகரவாசிகளிடமிருந்தும், தொழிலகங்களிடமிருந்தும் ஈட்டும் வருமானத்தைக் கொண்டே பெருநீர்க்குழாய்களை, மாற்றி, சீரிடுவதற்கான செலவை நாம் இறுத்து வருகிறோம். எமது அயலக மாநகரங்கள் பலவற்றையும் விடவும், பெரிய கனடிய மாநகரங்களை விடவும் குறைந்த நீர்க் கட்டணத்தையே இன்னமும் நாம் விதிக்கிறோம்.

toronto.ca/water/improvements

**பெருநீர்க்குழாய்கள் ஏன் வெடிக்கின்றன?**

வெப்பம் தணியுந்தோறும் மாநகரம் எங்கும் வெடிக்கும் பெருநீர்க்குழாய்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பெரிய வெடிப்புகளால் தெருக்களும் சொத்துகளும் சேதமடைகின்றன. மக்களுக்கு நீர் வழங்கல் தடைப்படுகிறது. பழுதுபார்ப்புகளுக்கு அதிக செலவு ஏற்படுகிறது.

ஆண்டுதோறும் மாநகரத்தில் 1,400 பெருநீர்க்குழாய்கள் வெடிக்கின்றன. நாட்பட நாட்பட குழாய்கள் வெடிப்பது ஓரளவு எதிர்பார்க்கத்தக்கதே. ரொறன்ரோ மாநகர நிலத்தடிக் குழாய்கள் சராசரியாக 55 ஆண்டுகள் நீடிக்க வல்லவை. அவற்றுள் 17 விழுக்காடான குழாய்கள் 80 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. 6.5 விழுக்காடான குழாய்கள் 100 ஆண்டுகள் கழிந்தவை.

உலோகத்தாலான பெருநீர்க்குழாய்கள் வெடிப்பதற்கான முக்கிய காரணங்களுள் ஒன்று: அவற்றுக்கும், சூழவுள்ள மண்ணுக்கும் இடையே இரசாயன அல்லது மின்னிரசாயன விளைவுகள் ஏற்படுவதால், குழாய்களின் புறத்தில் துருப்பிடிப்பதே. இரும்புக் குழாய்கள் துருப்பிடித்து, குழி விழுந்து, சிறு துவாரங்களாக விரிந்து, நீர் ஒழுகலாம்.

பெருநீர்க்குழாய்கள் வெடிப்பதற்கான வேறொரு வழமையான காரணம்: குளிர்ப்பருவ வெப்பம் கூடிக்குறைவதே. விரைந்துருகும் பனி மண்ணில் செறிய, பனியில் மண் தோய, பளு ஏறலாம். வழமைபோல் இரவில் வெப்பம் தணிய, ஈர மண் உறைந்து விரிய, நாட்பட்டு வலுவிழந்த குழாய்கள் அமுங்கி வெடிக்கும்.

தடித்த. பெருத்த குழாய்களைவிட ஒடுங்கிய பெருநீர்க்குழாய்கள் துருப்பிடித்து, புற அமுக்கத்துக்கு உள்ளாகி வெடிப்பது அதிகம். 1950களிலும். 60களிலும் இடப்பட்ட குழாய்கள் பலவும் தற்பொழுது வெடிக்கத் தொடங்கியுள்ளன.

இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாநகரம் என்ன செய்கிறது? பெருநீர்க்குழாய்களை மாற்றும், சீரிடும் நிகழ்திட்டங்களுக்கு மாநகரம் ஆண்டுதோறும் $120 மில்லியன் முதல் $160 மில்லியன் வரை செலவிடுகிறது.

பெருநீர்க்குழாய் வெடிப்பை அறிவிக்க அழைக்கவும்: 311. பெருநீர்க்குழாய் பழுதுபார்ப்புகள் பற்றிய ஐந்து நிமிட ஒளிநாடாவைப் பார்க்கவும்:

toronto.ca/water/watermain_breaks.htm

**உங்கள் மாநகரம் உங்களுக்கு உதவ முடியும் – ஓராண்டு கழித்து**

பொருளாதார பின்னடைவு ஏற்பட்டபொழுது மாநகர வாசிகள் அனைவருக்கும் வாய்ப்பும், வளமும், வாழ்வும் அளிக்க உறுதிபூண்டுதாக ரொறன்ரோ மாநகரம் வெறும் பேச்சுக்குச் சொல்லவில்லை. அதனைக் குறித்து அது நடவடிக்கை எடுக்கவே செய்தது.

*உங்கள் மாநகரம் உங்களுக்கு உதவ முடியும்* நிகழ்திட்டம் 2009 மாசி மாதம் தொடங்கப்பெற்றது. வேலைவாய்ப்பின்மை, வெளியேற்றம், வதிவகமின்மை என்பவற்றை எதிர்நோக்கிய ஆயிரக் கணக்கான மாநகரவாசிகளின், குடும்பங்களின் வாழ்வை மாற்றும் தாக்கத்தை இந்நிகழ்திட்டம் விளைவித்துள்ளது. உதவித் திட்டங்களுள் பின்வருவன அடங்கும்:

- புதிய வாடகை வைப்புக் கடன், வதிவக உதவிப்படி நிகழ்திட்டங்கள்
- இல்லாண்மையாளர், தாதியாளர் சேவைகளை விரிவாக்கல்
- வருமானம் குறைந்த முதியோர்க்கு செலவு குறைந்த சத்துணவு வகைகள்
- மாநகர மன்ற நிதியம் நாடி விதந்துரைக்கப்பட்ட சிக்கன வதிவகங்கள் 1,636
- தகுதிவாய்ந்த முதியோர்க்கும், வலுதளர்ந்தோர்க்கும் அதிகரித்த ஆதன வரி நீக்கப்பட்டது, வரி அதிகரிப்பு பின்போடப்பட்டது
- மாநகர மண்ணடபத்தில் புதிய வேலைவாய்ப்புச் சேவை, YMCA ஈயும் விருந்தோம்பல் நிகழ்திட்டம்
- ஒரே இடத்திலிருந்து நூல்வகைகளையும், இணைய வாயிலான வாய்ப்பு வளங்களையும், நிகழ்திட்டங்களையும் வசதிகளையும் கண்டறிய உதவும் புதிய இணையத்தளப் பிரிவு: Career and Job Search Help at Toronto Public Library
- ஏறத்தாழ $2.4 பில்லியன் பெறுமதி வாய்ந்த முதலீடு கொண்டு, 22,000 வேலைவாய்ப்புகள் உள்ள அல்லது தோற்றுவிக்கும் 61 தொழிலகங்களுக்கு/திட்டங்களுக்கு Gold Star Services

toronto.ca/torontohelps

**இலாபம் கருதாத அமைப்புகளுக்கு உதவும் மாநகர நிகழ்திட்டம்**

*ஈடுகொடுப்பு, புத்தாக்கம், ஒத்துழைப்பு* (CCC) *முதலீட்டு நிகழ்திட்டம்* என்பது இலாபம் கருதாத தொழிலகங்களுக்கு உதவும் புதிய மாநகர நிகழ்திட்டம் ஆகும். $50,000 வரையான நிதியுதவி கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க வகுத்த இந்நிகழ்திட்டம் வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கும். பொருளாதாரச் செயற்பாட்டைப் பெருக்கும். புதிய முதலீட்டை ஈர்க்கும்.

எட்டு வரையான அமைப்புகளுக்கு CCC முதலீட்டு நிகழ்திட்டம் மானிய உதவி அளிக்கும். மாநகர எல்லைக்குள் திட்டங்களை மேற்கொள்ளும் இலாபம் கருதாத அமைப்புகளுக்கும், சங்கங்களுக்கும் இந்நிகழ்திட்டம் துணைநிற்கும். நிதியுதவி நாடும் அமைப்புகள் முறைப்படி சமர்ப்பிக்கும் முனமொழிவும், விண்ணப்பமும் கருத்தில் கொள்ளப்படும்.

ஆண்டுதோறும் CCC முதலீட்டு நிகழ்திட்டத்தை பொருளாதார விருத்தி – பண்பாட்டுப் பகுதி நிர்வகிக்கும். தெரிவுசெய்யப்படும் உத்தேசங்கள் யூலை மாதம் மாநகராட்சி மன்றத்தின் அங்கீகாரத்துக்கு விதந்துரைக்கப்படும். அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் அடுத்த பஞ்சாங்க ஆண்டு முடிவடைய முன்னர் தமது திட்டத்தைப் பூர்த்திசெய்யவும், எழுத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவும் வேண்டும்.

toronto.ca/grants
or call 416-392-1820
or e-mail ccc@toronto.ca

## மாநகராட்சி மன்றத்தில் மாதரின் தொகையைப் பெருக்குவதற்கான இயக்கம்

மாநகராட்சி மன்றத்துக்கான தேர்தலில் பங்குபற்றும் மாதரின் தொகையைப் பெருக்க உதவும் நோக்குடன் கூடிய ரொறன்ரோ பிராந்திய வீராங்கனை இயக்கத்தை 2009 ஐப்பசி மாதம் ரொறன்ரொ மாநகராதிபதி டேவிட் மிலர் அவர்களும், மாநகர மாதர்-மன்றாளர்கள் 10 பேரும் தொடக்கி வைத்தார்கள். இப்புதுமைத் திட்டத்தில் மாநகர மாதர்-மன்றாளர்களுடன் சேர்ந்து 16 இளம் பெண்கள் பங்குபற்றுகிறார்கள். மாநகராட்சி மன்றாளர் ஒருவர் ஆற்றும் பணியை மாதர்-மன்றாளர்கள் தமது நேரடி அனுபவம் கொண்டு இளம் பெண்களுக்கு காட்டிக்கொடுத்து, ஆற்றுப்படுத்தி வருகிறார்கள்.

மாநகராட்சி மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் மாதர்க்கு நடைமுறை மதியுரை நல்கும் வெளியீடு: *The Election Toolkit for Women: The Candidates Guide for Municipal Elections.* கீழ்க்காணும் Regional Champions இணையப் பக்கத்தில் ‘தொடர்புடைய தளங்கள்’ ஈயும் தேர்தல் உபாயக்கோவைக்கான இணைப்பு காணப்படுகிறது.

மாநகர தேர்தல் 2010 அக்டோபர் 25-ம் திகதி நடைபெறும்.

toronto.ca/regional-champions/index.htm
toronto.ca/elections

**சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை (Wheel-Trans): அரவணைக்கும் பயணம்**

*சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை* என்பது வழமையான போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவதில் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகும் வலுதளர்ந்தோருக்காக ரொறன்ரோ போக்குவரத்து ஆணையம் வீட்டுக்கு வீடு நடத்தும் போக்குவரத்துச் சேவை. இது சில்லுக் கதிரையுடன் உட்புகவல்ல பேருந்துகளையும், நவீன வாடகை ஒப்பந்த ஊர்திகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சேவை.

சில்லுக்கதிரை – ஊர்திச்சேவையின் சிறப்புகள்: தாழ்ந்த விசேட கீழ்த்தளம். பேருந்து, மின்பேருந்து, சுரங்கத் தொடருந்துகளைப் பயன்படுத்த முடியாவாறு நடமாட்டம் மட்டுப்பட்ட பயணிகள் எளிதில் சில்லுக் கதிரையுடன் ஏறி இறங்குவதற்கான தகடு.

சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை தொடங்க முன்னர் வலுதளர்ந்தோர் பலர் விரும்பியவாறு பயணம் செய்ய முடியவில்லை. சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை தொடங்கிய பின்னர் சில்லுக் கதிரை பயன்படுத்துவோர் சுயமாகப் பயணம் செய்து, அன்றாட அலுவல்களைச் செய்து மகிழ முடிகிறது.

சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை முதலில் தொடங்கியபொழுது அதனைப் பயன்படுத்த 48 பேர் மாத்திரமே பதிவுசெய்தனர். இன்று அதனைப் பயன்படுத்துவோர் ஏறத்தாழ 60,000 பேர், சாரதிகள் 280 பேர், பேருந்துகள் 176, சில்லுக் கதிரையுடன் உட்புகவல்ல வாடகை ஊர்திகள் 168. கிழமை நாட்களில் காலை 6 மணி முதல் அதிகாலை 1 மணி வரை, சனி-ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 7 மணி முதல் அதிகாலை 1 மணி வரை சேவை இடம்பெறுகிறது.

ஒருவரின் பொதுவான உடல்நலம், வருமானம், குறிப்பிட்ட வலுவீனங்களை விடுத்து, அவர் சுயமாக நடமாடி உடலியக்கத்தில் ஈடுபடும் வாய்ப்புண்டா என்பதைக் கருத்தில் கொண்டே அவருக்கு சில்லுக்கதிரை – ஊர்திச்சேவையைப் பயன்படுத்துவதற்கான தகுதி உண்டா என்பது நிச்சயிக்கப்படுகிறது. விண்ணப்பதாரிகள் அனைவருடனும் நேர்முகமாக உரையாடப்படும். நியாயமான முறையில் அவர்கள் கணிப்பிடப்படுவார்கள்.

அன்றாடம் காலை 7 மணி முதல் இரவு 11 மணி வரை பதிவு செய்யலாம். தொலைபேசியில் காத்திருப்பதை தவிர்ப்பதற்காகப் புகுத்தப்பட்ட இணையவழிப் பதிவு ஒரு புதிய சிறப்பாகும். இணையத்தளத்தை நாடியும் நேரடியாகப் பதிவுசெய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு சில்லுக்கதிரை – ஊர்திச்சேவை வாடிக்கையாளர் சேவையை அழைக்கவும்: 416-393-4111. செவிப்புலன் இழந்தோர் அல்லது குன்றியோர்க்கான தொலைத்தட்டெழுத்துப்பொறி இலக்கம்: 416-393-4555.

ttc.ca
mywheel-trans.ttc.ca

**ரொறன்ரோ மாநகர அணி, அடுக்குமாடிக்கூட நியமங்களை நடைமுறைப்படுத்துகிறது**

கட்டிட நியமங்களை முன்னின்று நடைமுறைப்படத்தும் நிகழ்திட்டத்தை 2008 திசம்பர் 1-ம் திகதியே ரொறன்ரோ மாநகரம் முதன்முதல் தொடங்கியது. இந்நிகழ்திட்டத்தின் முதலாவது ஆண்டில் 186 மாநகர வாடகைக் கட்டிடங்களைப் பார்வையிட்டு, நியமங்களை நடைமுறைப்படுத்தும் இலக்கு குறிக்கப்பட்டது. ரொறன்ரோ மாநகர கட்டிடங்கள் அனைத்தும், மாநகர ஆதன நியம உபவிதியில் நிர்ணயிக்கப்பட்டவாறு பேணப்படுவதை உறுதிப்படுத்துவதே அதன் நோக்கம்.

15 உறுப்பிளர்களைக் கொண்ட அணி இற்றைவரை 188 கட்டிடங்களை ஆராய்ந்து, 10,496-க்கு மேற்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, 1,027 உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. 2008 தை மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை 14 கட்டிடங்கள் ஆராயப்பட்டு, 47 குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, 17 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. எண்ணிக்கைகள் கணிசமானளவு அதிகரிப்பதை இது உணர்த்துகிறது.

ஊர்திக் களங்கள், மாடிக்கூடங்கள், விறாந்தைகள், புறத்தரைகள் போன்ற பொது இடங்கள் கருத்தூன்றி ஆராயப்பட்டன. பொறிவகைகள், வெப்ப வசதிகள், வெந்நீர் வசதிகள் என்பனவும் ஆராயப்பட்டன. ஆங்காங்கே மாடிக்கூடங்களும் பரிசோதிக்கப்பட்டன.

தமது கட்டிடங்கள் ஆராயப்படவுள்ளன என்பது சில வேளைகளில் கட்டிட உடைமையாளர்களுக்குத் தெரியவருவதுண்டு. அதனால், மேற்படி அணி வந்து பரிசோதிப்பதற்கு முன்னரே பல குறைபாடுகளை அவர்கள் நிவர்த்திப்பதுண்டு. கட்டிட ஆய்வு அணி துறைமைத்திறத்துடன் செயற்படுவதை, கட்டிட உடைமையாளர்களும், குடியிருப்பாளர்களும் பாராட்டும் செய்திகள் கிடைத்து வருகின்றன.

இந்நிகழ்திட்ட விபரங்கள் இணைய வாயிலாக எவர்க்கும் கிடைக்கும். அவை கிழமைதோறும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. உங்கள் கட்டிடம் குறித்து முறைப்பாடு செய்யும் விதமும் அதில் விளக்கப்பட்டள்ளது.

toronto.ca/licensing/mrab.htm

**அவசரநிலையை எதிர்கொள்ளத் தயாராய் இருப்பது முக்கியம்**

ஒவ்வொருவரும் ஓர் அவசரநிலையை எதிர்கொள்ள ஒரு திட்டத்தை வகுத்து தயாராக வைத்திருக்க வேண்டும்.

ஆகக்குறைந்தது 72 மணித்தியாலங்களுக்காவது போதிய உணவு, நீர், மற்றும் பொருட்கள் கொண்ட பை ஒன்றை நிங்கள் வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகள், முதியோர், விசேட உணவு உட்கொள்ளும் குடும்ப அங்கத்தவர்களுக்கு தேவைப்படும் பொருட்களைக் கருத்தில் கொண்டு உங்கள் பையினுள் பொருட்களை இட்டு வைக்கவும். முதலுதவிப் பொருட்களும், மருந்துவகைகளும் உங்கள் பையினுள் இருக்க வேண்டும். காப்புறுதி, உடைமை ஆவணங்கள், மருந்து நிர்ணயக் குறிப்புகள் போன்ற உங்கள் முக்கிய ஆவணங்களுக்குப் பிரதி எடுத்து வைத்திருக்கவும். கைமின்விளக்கு, கைவானொலி, பற்றெரியில் இயங்கும் மணிக்கூடு, பற்றெரிகள், தீக்குச்சிகள், மெழுகுதிரிகள் இன்றியமையாதவை. செல்பேசி அல்லது ஒற்றைத் தொடர்புக் கம்பித் தொலைபேசி ஒன்றும் உங்களுக்குத் தேவைப்படும். மின்சாரம் இல்லாவிட்டால் கொடியற்ற தொலைபேசிகள் செயற்பட மாட்டா.

வீட்டு அல்லது குடியிருப்பாளர்க்கான/அடுக்குமாடிக்கூடக் காப்புறுதி இருந்தால், தீ அல்லது வெடியதிர்வு போன்ற பெருஞ்சம்பவம் ஏற்பட்டு, உங்கள் உடைமை எதற்கும் சேதம் விளையும் பட்சத்தில், அதனை மாற்றுவதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் அது உதவும். சரியான காப்பீட்டுடன் கூடிய வீட்டுக் காப்புறுதி கொண்டு, உங்கள் வீட்டினுள் அல்லது அடுக்குமாடிக்கூடத்துள் தேங்கும் கழிநீரினால் விளையும் சேதத்துக்காகும் செலவையும் இறுக்கலாம். உங்கள் வீடு அல்லது அடுக்குமாடிக்கூடம் பழுதுபார்க்கப்படும் வேளையில் நீங்கள் அதனை விட்டு வெளியேற நேர்ந்தால், உங்கள் வாழ்க்கைச் செலவையும் அந்தக் காப்புறுதி கொண்டு இறுக்கலாம். வீட்டு/அடுக்குமாடிக்கூடக் காப்புறுதி இல்லாவிட்டால், மேற்படி செலவுகள் அனைத்தையும் நீங்களே இறுக்க நேரும்.

ஓர் அவசரநிலை தோன்றினால், ரொறன்ரோ மாநகர அவசரசேவைப் பணியாளர்கள் அறிவுறுத்தியவாறு நடக்கவும். வானொலி கேட்டபடியோ, தொலைக்காட்சி பார்த்தபடியோ இருக்கவும். அவசரசேவைப் பணியாளர்கள் அறிவுறுத்தினாலொழிய, வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம். வீட்டுக்குள் வெதுவெதுப்பாக இருக்கும். வேண்டிய பொருட்களும் இருக்கும். எனவே வீட்டுக்குள் இருக்கவும்.

போதிய அவகாசம் எடுத்து தயார்நிலை அடையவும்.

toronto.ca/oem

**ரொறன்ரோ பந்தயம்**

*ரொறன்ரோ பந்தயம்* எனப்படும் முதியோர்க்கு நிதி திரட்டும் மிகமுக்கிய மாநகர நிகழ்ச்சிக்கான பயிற்சியைத் தொடங்குவதற்குரிய தருணம் இது. யூன் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீங்கள் 5 கிலோமீட்டர் நடக்கலாம், அல்லது 5 கிலோமீட்டர் ஓடலாம், அல்லது 1 கிலோமீட்டர் நடக்கலாம்.

பந்தய நாளில் நடப்பதையும் ஓடுவதையும் விட, வேறு பல விதங்களிலும் நீங்கள் பங்குபற்றலாம். எடுத்துக்காட்டாக, பந்தயத்தில் பங்குபற்றும் ஒருவரை நீங்கள் ஆதரிக்கலாம். அல்லது இந்த மகத்தான நன்னோக்க நிகழ்ச்சியில் நீங்கள் ஒரு தொண்டராகச் செயற்படலாம். *ரொறன்ரோ பந்தயத்தில்* திரட்டப்படும் நிதி கொண்டு முதியோரின் சுயவாழ்வு, அகவாழ்வுத் துணை, ரொறன்ரோ நெடுங்கால பராமரிப்பு அகங்கள் - சேவைகள் என்பவற்றுக்கு உதவும் சமூக நிகழ்திட்டங்கள் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிகிறது.

toronto.ca/challenge

**தொழிலக உடைமையாளர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்: சூழல் குறித்து அறிவித்தல், விபரம் தெரிவித்தல் பற்றிய உபவிதி ஜனவரி 1 முதல் நடைமுறையில் உள்ளது**

சூழல் குறித்து அறிவித்தல். விபரம் தெரிவித்தல் பற்றிய உபவிதி (மாநகர உபவிதிக் கோவை 423) ஜனவரி 1-ம் திகதி நடைமுறைக்கு வந்தது. "எங்கள் சுற்றாடலில் நச்சு-இரசாயனப் பொருட்களைக் குறைத்து பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதே இந்த உபவிதியின் நோக்கம்" என்கிறார் ரொறன்ரோ சுகாதார மருத்துவ அதிகாரி Dr. David McKeown.

இரசாயன விபரம் (ChemTRAC) எனப்படும் புதிய மாநகர நிகழ்திட்டத்தின் ஓர் அங்கமே இந்த உபவிதி. இந்த நிகழ்திட்டத்தின்படி உள்ளூர்த் தொழிலக உடைமையாளர்கள், தாம் பயன்படுத்தும் நச்சு-இரசாயன வகைகளைத் தடமொற்றி விபரம் தெரிவிக்க வேண்டும். பசுமைத் தொழிலக திட்டங்கள் கொண்ட உள்ளூர் அமைப்புகளுக்கும் ChemTRAC துணைநிற்கும். சமூகத்தில் காணப்படும் நச்சு-இரசாயன வகைகள் பற்றிய விபரங்களையும் அது மக்களுக்கு வழங்கும்.

ரொறன்ரோ மாநகர தொழிலகங்கள் எமது இணையப் பக்கத்தை நாடி, பின்வரும் விடயங்கள் பற்றி அறிந்துகொள்ளலாம்:

- அவை புதிய உபவிதிக்கு உட்பட்டவையா என்பது
- மாநகரத்துக்கு விபரம் தெரிவிப்பதற்கான காலக்கெடு
- இரசாயன வகைகளைத் தடமொற்றி அறிவிப்பதில் ரொறன்ரோ பொது சுகாதாரத் துறை உதவக்கூடிய விதம்
- இரசாயன வகைகளைக் குறைத்து, பசுமை நாடும் வேறு விதங்கள்

toronto.ca/chemtrac
or call 416-338-7600

**அடுக்குமாடியக, கொண்டமனை வாசிகள் கழிவுப்பொருட்களை மீள்பாவனைக்கிட்டு வருகிறார்கள்**

அடுக்குமாடியக, கொண்டமனை வாசிகளுக்காக கழிவுப்பொருள் அகற்றல் திட்டங்கள் பலவற்றை மாநகரம் புகுத்தியுள்ளது.

அடுக்குமாடியகங்கள், கொண்டமனைகள் அனைத்துக்கும் 2010-ம் ஆண்டுக்கான மீள்பாவனைக்கிடல் நாள்காட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது (500,000-க்கு மேற்பட்ட நாள்காட்டிகள்!) அதில் மீள்பாவனைக்கிடல், கழிவுப்பொருட்களைச் சரிவரக் கைதீர்த்தல் பற்றிய விபரங்கள் துலக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாடியகத்துக்கும் இலவச உள்ளக மீள்பாவனைப்பொருட் கொள்கலம் ஒன்றை வழங்க நாம் முன்வந்தோம். மாடியகவாசிகள் தமக்கு வசதிப்பட்ட விதத்தில் கழிவுப்பொருட்களை மீள்பாவனைக்கிடும் வண்ணம் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. மாடியகவாசிகள் தமது உள்ளக கொள்கலத்தில் மீள்பாவனைப் பொருட்களை இட்டு, தமது கட்டிடத்துக்கெனக் குறிக்கப்பட்ட மீள்பாவனைக் களத்துக்கு எடுத்துச்செல்லலாம்.

3Rs Ambassador Volunteers எனப்படுவோரையும் மாநகரம் அமர்த்தி, சோதித்து, பயிற்றி வருகிறது. அவர்கள் தமது கட்டிடத்தில் நெகிழ்திய கழிவுப்பொருள் திசைதிருப்பல் நிகழ்திட்டம் பற்றி அறிவுறுத்தும் இயக்கம் ஒன்றை உருவாக்கி, செயற்படுத்துவார்கள். நீங்கள் 3Rs Ambassador Volunteer ஆகும் விதம் பற்றி அறிவதற்கு நாடவும்: toronto.ca/3rs or call 311.

அடுக்குமாடியகங்கள், கொண்டமனைகள் அனைத்திலும் சேதனக் கழிவு (பச்சை வாளிக் கழிவு) அகற்றல் திட்டம் புகுத்தப்பட்டு வருகிறது. தாழ்புலம் செல்லும் கழிவுவகைகளுள் (எடையின்படி) ஏறத்தாழ 30 விழுக்காடு சேதனக் கழிவுவகைகளே. தற்பொழுது ஏறத்தாழ பல்குடியிருப்புக் கட்டிடங்கள் 200 இந்நிகழ்திட்டத்துக்கு உட்பட்டவை. அடுத்த ஈராண்டுகளில் மாநகரம் எங்கும் பல்குடியிருப்புக் கட்டிடங்கள் அனைத்தும் இந்நிகழ்திட்டத்துக்கு உடபட்டுவிடும்.

toronto.ca/recycle
or call 311

**புதிய இணையவாயிலான கழிவு-வழிகாட்டி உங்கள் பிரச்சனையைத் தீர்த்துவைக்கும்**

உங்கள் கழிவுப் பொருட்களைக் கையாள்வது பற்றி அறிந்துகொள்ளவும்.

மாநகர இணையத்தளத்தில் புதிய தேடற்கருவி – கழிவு-வழிகாட்டி ஒன்று உண்டு. உங்கள் கழிவுப் பொருட்களைக் கையாளும் விதத்தை அறிவதற்கு அது உங்களுக்கு உதவும். இந்தக் கழிவுப் பொருளை எந்த வாளியில் இடுவது? இது கேடுசூழ் வீட்டுக் கழிவுப் பொருளா? இதனை வாளியில் இடக்கூடாது என்றால், என்ன செய்வது?

மீள்பாவனைக்கு இடக்கூடிய பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனினும் தற்பொழுது ரொறன்ரோவில் மீள்பாவனைக்கு இடமுடியாத பிளாஸ்திக், உலோகப் பொருள்வகைகள் சில இன்னும் உள்ளன. வெளிப்பான பிளாஸ்திக்காலான உணவுகொள் கலங்கள், பிளாஸ்திக் குமிழிச் சரைகள், புறொப்பேன் உருளைகளை அறவே மீள்பாவனைக்கு **இடக்கூடாது.**

மீள்பாவனைக்கு இடுவதில் நீங்கள் ஆர்வம் கொள்வது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். எனினும் நீங்கள் சரிவர மீள்பாவனைக்கு இடாவிட்டால், அது மீள்பாவனைப் படிமுறையைக் கெடுத்து, உபகரணங்களைச் சேதப்படுத்தி, பணியாளர்களைப் புண்படுத்தக்கூடும்.

toronto.ca/recycle
or call 311

**விளையாட்டுத் திடல்களில் புகைத்தலாகாது**

விளையாட்டுத் திடலிலிருந்து 9 மீட்டர் அல்லது 29.5 அடி தூரத்துள் புகைத்தலாகாது.

ரொறன்ரோ மாநகர விளையாட்டுத் திடல்களில் புகைத்தலாகாது. புதிய உபவிதியின்படி பின்வருவனவற்றைச் சூழ்ந்து 9 மீட்டர் சுற்றுவட்டத்துள் புகைத்தலாகாது:

- விளையாட்டுத் திடலின் பாதுகாப்புக்கு உட்பட்ட புறத்தின் அல்லது விளையாட்டுச் சாதனத்தின் விளிம்பு எதுவும்
- உலவு தடாகத் தொட்டியின் அல்லது நீர் விசிறல் களத்தின் பாதுகாப்புக்கு உட்பட்ட புறத்தின் விளிம்பு எதுவும்

High Park Zoo, மற்றும் சோலை-வன-பொழுதுபோக்குத் துறையினால் நிர்வகிக்கப்படும் விலங்குப் பண்ணைகளுள் எங்குமே புகைத்தலாகாது.

பிறர் ஊதும் புகையின் தாக்கத்தால் சிறாரின் கவனமும், நடத்தையும் பாதிக்கப்படுவதை ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. (தள்ளுவண்டி, ஊஞ்சல், அடைப்பு-வழுக்கி போன்ற எதிலும் உள்ள) சின்னஞ்சிறார், தம்மருகே புகைக்கும் எவரையும் விட்டு அகல முடியாதவர்களாக இருக்கக்கூடும்.

ரொறன்ரோ மாநகர சோலைகளில் 800 விளையாட்டுத் திடல்கள் அமைந்துள்ளன. இந்த உபவிதியின் பெறுபேறாக மாநகரம் எங்கும் சின்னஞ்சிறார் பத்திரமாக விளையாட இடங் கிடைக்கும்.

toronto.ca/parks

**ஹை பார்க்கில் (High Park) ஒரு வைக்கோற் கூடத்தை அமைக்க உதவுக**

ஹை பார்க்கில் சாந்துப்பூச்சுடன் கூடிய வைக்கோற் சுவர், உள்ளூரில் தயாரிக்கப்பட்டு, மீளப்பயன்படுத்திய பொருள்வகைகள் கொண்டு சிறார் போதனைக் கூடம் ஒன்று அமைக்கப்படும். ஒரு சட்டத்தினுள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கோல் கட்டுகள் அடுக்கப்பட்டு, வலுவான, நற்காப்புக் கொண்ட சுவர்கள் அமைக்கப்படும்.

இது மிகச்சிறந்த பசுமைக் கட்டுமான வடிவமைப்புச் சிறப்பு வாய்ந்த இந்த வைக்கோற் கூடம் ஆகும். இது சிறார் தோட்டம், இயற்கை நிகழ்திட்டங்கள், சமையல் வகுப்புகள், சமூக நிகழ்ச்சிகள், பசுமை எரியப் பட்டறைகள் களைகட்டும் இடமாக விளங்கும்.

இந்தக் கூடத்தை அமைப்பதற்கு 'ஒரு வைக்கோற் கட்டுக்குப் பொறுப்புநின்று' உதவும்படி மாநகரவாசிகளை இம்மாநகரமும், ரொறன்ரோ சோலை-மர நிறுவகமும் கேட்டுக்கொள்கின்றன. திரட்டப்படும் நிதி, சிறாருக்கும் சமூகத்துக்கும் இடைப்பட்ட சூழல் நிகழ்திட்டங்களை மேற்கொள்வதற்குப் பயன்படத்தப்படும். நன்கொடைகள் அனைத்தும் வரிப் பெறுகைச்சீட்டுக்குத் தகுதி உடையவை.

toronto.ca/parks/programs/children
or call 416-338-5055

**கோடை முகாம்**

எல்லா வயதும் நாட்டமும் கொண்ட பிள்ளைகளுக்கான மாநகர கோடை முகாம் ஒன்று இருக்கிறது. உங்கள் உள்ளூர் சமூக நிலையத்தில் அல்லது நூலகத்தில் வேடிக்கை வழிகாட்டியின் (FUN Guide) பிரதி ஒன்றை எடுத்துச் செல்லத் தவறவேண்டாம். அல்லது நிகழ்திட்ட நிரலீடுகளுக்கும், பதிவு-விபரத்துக்கும் எமது இணையத்தளத்தை நாடவும்: www.toronto.ca/parks/camps.htm

toronto.ca/parks/camps.htm

**வதிவக கட்டுமான சாதனை**

கடந்த நான்கு ஆண்டுகளில் திடமும் திறமும் கொண்டு மேற்கொண்ட ஒத்துழைப்பின் பெறுபேறாக 5,000-க்கு மேற்பட்டோர் புத்தம் புதிய சிக்கன வீடுகளைப் பெற்றுக்கொண்டார்கள். ரொறன்ரோ மாநகராட்சி மன்றம், கனடிய அரசாங்கம், ஒன்ராறியோ மாகாணம், தனியார் துறை, இலாபம் கருதா அமைப்புகள் கரிசனையுடன் ஒருங்கிணைந்து பெருந் தொகையானோர்க்கு நல்வாழ்வு அளித்துள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் நாம் எய்திய சாதனையை கீழ்வரும் சட்டகம் புலப்படுத்துகிறது. சிக்கன வதிவக நிகழ்திட்டம் (Affordable Housing Program), வதிவக சீரமைப்பு உதவி நிகழ்திட்டம் (Residential Rehabilitation Assistance Program), வதிவகமின்மை ஒத்துழைப்புத் திட்டம் (Homelessness Partnering Strategy) மற்றும் பிற திட்டங்கள் மூலம் அரசாங்கம் மேற்கொண்ட முதலீடுகளை இது புலப்படுத்துகின்றது:

| 2006 முதல் 2009 வரை | |
|---|---|
| 5,383 | மத்திய, மாகாண, மாநகர நிதியுதவி கொண்டு அமைக்கப்பட்ட புதிய சிக்கன வதிவகங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை |
| 4,377 | மாநகராட்சி மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிக்கன வீடுகளின் எண்ணிக்கை |
| 2,153 | அமைத்துமுடிக்கப்பட்ட சிக்கன வீடுகளின் எண்ணிக்கை |
| $483 மில்லியன் | சிக்கன வீடுகள் அமைப்பதில் மத்திய, மாகாண, மாநகர ஆட்சிமன்றங்கள் இட்ட முதலின் தொகை |

மேற்கண்டவாறு சாதனை படைத்த வரலாற்றைத் தொடரும் நோக்குடன், 10 ஆண்டுத் திட்டம் ஒன்றை மாநகரம் ஏற்றுக்கொண்டுள்ளது. அது சிக்கன வதிவகங்களை அமைத்து, விருத்திசெய்வதற்கான திட்டம். அது வதிவக உரிமைப் பட்டயம் ஒன்றையும் உள்ளடக்கிய திட்டம். மாநகரத்துக்கும், நாட்டுக்கும் புதிய திட்டம். ரொறன்ரோ வதிவக வாய்ப்பு (Housing Opportunities Toronto) என்பது, ரொறன்ரோவில் சிக்கன வதிவகங்கள் அமைக்கும் முக்கிய பணியில் அரசாங்க முதலீட்டையும், அரசாங்க - தனியார் முயற்சியையும், வதிவகவாசிகளின் பங்கினையும் படிப்படியாக வழிநடத்தும் திட்டம். வாழ்ந்து, சிறந்து, ஓங்குவதற்கு வேண்டிய சிக்கன வதிவகங்களைக் கண்டறிவதில் அல்லது வைத்திருப்பதில் 257,700 குடும்பங்களுக்கு உதவுவதே எமது இலக்கு. மேற்படி திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வேளையில் 60,000-க்கு மேற்பட்ட வேலைவாய்ப்புகள் தோற்றுவிக்கப்படும். விபரங்களுக்கு எமது இணையத்தளத்தை நாடவும்:

toronto.ca/affordablehousing

**நயக்கும் மாநகர சிறப்பு, நயக்கும் மாநகர சேவை**

ரொறன்ரோவில் நீங்கள் நயக்கும் இடம் எதுவும் உண்டா? அதன் சிறப்பு என்ன?

நான் பெரிதும் கோடையில் அடிக்கடி Harbourfront செல்வதுண்டு. அங்கே பல்பண்பாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றை அவர்கள் நடத்துகிறார்கள். அவற்றுள் "Barbados on the Water" என்பது ஒன்று. என் தாயகம் Barbados. மேற்படி இடத்தை நான் விரும்புகிறேன். அங்குள்ள கப்பல் ஒன்றில் ஏறி அந்த நீர்முகத்தில் நான் 40 நிமிடம் பயணித்துள்ளேன்.

சிறந்த மாநகர சேவை என்று உங்களுக்கு எதுவும் தென்படுகிறதா?

அல்லிக் கலைவிழாவை (Nuit Blanche) நான் மிகவும் நயந்தேன். நான் ஓர் அகநகரவாசி. ஆதலால் யூனியன் நிலையம் (Union Station) உட்படப் பல நிகழ்விடங்களுக்கு என்னால் நடந்தே செல்ல முடிந்தது. நியூ யோர்க்கிலிருந்து எனது நண்பர்கள் இங்கு வந்திருந்தார்கள். சில நிகழ்விடங்களுக்கு அவர்களை நான் கூட்டிச் சென்றேன். அல்லிக் கலைவிழா ஒரு நல்ல நிகழ்ச்சி. அது ஓர் இலவச நிகழ்ச்சியும் கூட.

*Trevor Best, Toronto*

ரொறன்ரோவில் நீங்கள் நயக்கும் இடம் எதுவும் உண்டா? நீங்கள் மிகவும் விரும்பும் சிறந்த சேவை எதுவும் உண்டா? எங்களுக்கு எழுதி அனுப்பவும்: ourtoronto@toronto.ca

**ரொறன்ரோவுக்கு பசுமை வாழ்வு எரியவலுவை மாநகராட்சி மன்றம் அளிக்கிறது**

*பசுமை வாழ்வு எரிய* நிகழ்திட்டத்தை ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் மிகுந்த பெரும்பான்மையுடன் ஏற்றுக்கொண்டுள்ளது. ரொறன்ரோவில் புவிவெப்பவாயு வெளியேற்றத்தை அதன் 1990-ம் ஆண்டுக்குரிய மட்டத்திலிருந்து 80 விழுக்காடு குறைக்கும் இலக்கை 2050-ம் ஆண்டில் எய்தும் நோக்குடன் கூடிய புதிய துணிகரத் திட்டம் இது.

இது மாநகர காலநிலை மாற்ற நடவடிக்கைத் திட்டத்தின் அடுத்த கட்டம். தூய, நம்பக, சிக்கன எரிய விநியோகம் இடம்பெறும் ரொறன்ரோவை நாடும் திட்டம் இது. முற்றுமுழுதான எரியத் திட்டம் இல்லாவிட்டால், புவிவெப்பவாயு வெளியேற்றம் 2050-ல் பருமட்டாக 33 மெகாதொன் வரை உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 10,000 றோஜேர்ஸ் சென்டர் நிலையங்களை நிரப்பத்தக்கது (1990-ல் இது 22 மெகாதொன்னாக இருந்தது).

*பசுமை வாழ்வு எரியவலு* நிகழ்திட்டம் மூன்று மைய நடவடிக்கைகள் மூலம் மேற்படி சவாலை எதிர் கொள்ளவுள்ளது:

1. Live Green Toronto Energy and Water Efficiency Initiative ஊடாக எரியவலு, நீர் ஆய்வுகள் போன்ற திட்டங்களுக்கு ஒரு தடவை துணைநின்று நிதியுதவி புரிதல், சாதனம்பொருத்தல், செம்மைப்படுத்தல். மாநகரக் கட்டிடங்களில் எரிய நுகர்வுத் திறனை எய்துவதில் மாநகரம், Toronto Hydro, நாட்டம் கொண்ட பிற தரப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு பெரிதும் உதவும்.

2. காற்று, கதிர், புவியகவெப்ப எரிய உற்பத்தி, நுகர்வு, விற்பனையில் ரொறன்ரோவாசிகளுக்கு உதவுதல். மீளெரிய உற்பத்தியை இது பெருக்கும்.

3. அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தி, வாடிக்கையாளர்கள் தமது மின்பாவனையைத் தாமே நெறிப்படுத்துவதற்கு வேண்டிய விபரங்களையும், தெரிவுகளையும், கட்டுப்பாடுகளையும் அளிக்கும் வசதிக்குத் துணைநின்று எரிய விநியொகத்தைப் பெருக்கல்.

livegreentoronto.ca

**ரொறன்ரோ நேர்மைநெறி ஆணையாளர்**

2004-ம் ஆண்டு, கனடாவில் முதன்முதலாக, நேர்மைநெறி ஆணையாளர் அலுவலகத்தை அமைத்த மாநகரம் ரொறன்ரோவே.

மாநகராதிபதியையும், மாநகர மன்றாளர்களையும் நெறிப்படுத்தும் நடத்தைநெறிக் கோவையை நிலைநிறுத்துவதில் நேர்மைநெறி ஆணையாளர் மாநகராட்சி மன்றத்துக்குத் துணைநிற்கிறார். உள்ளூர்ச் சபை உறுப்பினர்களுக்கு (மட்டுப்பட்ட வரையறையுடன் கூடிய) புறம்பான கோவைகள் உள்ளன (எடுத்துக்காட்டு: Exhibition Place, Toronto Zoo); தீர்ப்பாளர் சபைகள் (எ-கா: Licensing Tribunal, Committee of Adjustments). அறிவுறுத்தல், மதியுரைத்தல், முறைசார் மற்றும் முறைசாரா முறையீடுகளுக்குப் பதிலிறுத்தல் மூலம் உயரொழுக்க நியம நடத்தை ஊக்குவிக்கப்படுகிறது.

அன்பளிப்புகள் - நன்மைகள் பெறல், அந்தரங்கமான தகவல் முறைகேடாகத் தெரிவிக்கப்படாவாறு பார்த்தல், மாநகர உடைமைகளும், வளங்களும் பயன்படுத்தப்படுவதை மட்டுப்படுத்தல், பணியாளர்களை நடத்தும் முறை, முறைகேடாகச் செல்வாக்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல், மன்றத்தின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தவறுதல் உட்படப் பல்வேறு விடயங்களுடன் நடத்தைவிதிக் கோவை சம்பந்தப்படுகிறது.

மேற்படி கோவை மீறப்படுவது தொடர்பான முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான வரைவுடன்பாடுகளை மாநகராட்சி மன்றம் வகுத்துள்ளது. தெளிவான முறையில் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கும், முறைசாரா விதத்தில் பிணக்குகளைத் தீர்க்க இடங்கொடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட அனைவரும் விரைவாகவும் எளிதாகவும் செயற்படுவதற்கும் ஏதுவாகவே இவ்வரைவுடன்பாடகள் வகுக்கப்பட்டள்ளன.

toronto.ca/integrity

**நவீன எரியவகை**

மின்துறை அடுத்த தலைமுறைக்குத் தயாராகி வருகிறது. ரொறன்ரோ மாநகரத்தின் நாட்பட்ட மின்கட்டுக்கோப்பைச் சீரிடுவதற்கான பணியை 2010-ல் Toronto Hydro-Electric System Limited விரைவுபடுத்தி வருகிறது. நவீன தொழினுட்பங்களுடன் கூடிய இவ்விருத்தி வருங்கால மின்தேவைக்கு ஈடுகொடுக்கும். வருங்காலத்தில் விநியோகிக்கப்படும் மீளெரிய உற்பத்திக்கு இட்டுச்செல்லும். வாடிக்கையாளர்க்கான சேவையை மேம்படுத்தும். இதனால் சில பகுதிகளில் சேவையும், நம்பகத்தன்மையும் மேம்படும்.

Toronto Hydro-வின் மின்விநியோக சாதனங்களுள் பருமட்டாக மூன்றிலொரு பங்கு மாற்றப்பட வேண்டியவை. மாநகரப் பகுதிகள் எங்கும் மின்வடங்கள், மின்மாற்றிகள், மின்மாற்றி நிலையங்கள் கட்டம் கட்டமாக, நெடுங்காலத்துக்கு மாற்றப்படும். அதற்காக Toronto Hydro $300 மில்லியனுக்க மேற்பட்ட தொகையை முதலீடு செய்யும். இதன் பெறுபேறாக வாடிக்கையாளர் சேவை மேம்படும். மின் தடைப்படல் குறையும்.

மேற்படி மின்கட்டுக்கோப்புச் சீரமைப்புடன், Toronto Hydro-வின் மின்பேணல் - மின்தேவை கையாள்கைத் திட்ட (CDM) முயற்சிகளும் சேரும். மின்பாவனையைக் குறைக்கும்படி அல்லது மின்கிராக்கி குறைந்த வேளைகளில் அதனைப் பயன்படுத்தி, மாநகரளாவிய உடனடி மின்நெருக்கடியைத் தணித்து, மின்கட்டணத்தை மீதப்படுத்தும்படி மாநகரவாசிகளிடம் Toronto Hydro கேட்டுக்கொள்கிறது. Toronto Hydro-வின் CDM திட்டங்கள் 2005-ல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பருமட்டாக 387 megawatts (MW) மீதப்பட்டுள்ளது. ஒரு megawatt என்பது 1 மில்லியன் watts-க்கு அல்லது பருமட்டாக (15 watt கொண்டு எரியும்) 66,667 CFL மின்குமிழ்கள் எரிவதற்கு வேண்டிய மின்சாரத்துக்கு நிகராகும். 2009-ல் மாத்திரம் ரொறன்ரோவாசிகள் கிட்டத்தட்ட 39.7 MW மீதப்படுத்தினார்கள் – இது 27,000 வீடுகளை மின்விநியோகத்திலிருந்து நீக்குவதற்கு நிகராகும்.

torontohydro.com

## இன்னொரு தடவை நீர்முகம் பார்க்கும் வேளை இது

அண்மையில் நீங்கள் நீர்முகம் செல்லவில்லை என்றால், எதிர்வரும் கோடையில் அங்கு சென்றுவரத் திட்டமிடலாமே! ரொறன்ரோ மாநகர நீர்முகம் சீரமைக்கப்படும் இவ்வேளையில், நீங்கள் துய்க்கும் வண்ணம் புதிய சோலைகள், பொது வெளிகள் பலவும் அங்கு அமைக்கப்படவுள்ளன.

**அலைத்தளங்கள் மூன்று**

ரொறன்ரொ மாநகர மத்திய நீர்முகத்தை, நீர்விளிம்போடு அமைக்கப்பட்டுள்ள விருதுபெற்ற "அலைத்தளங்கள்" மூன்று சிறப்பிக்கின்றன. கனடிய சுற்றுலா மனைகளையும், மகத்தான ஒன்ராறியோ ஏரியோரங்களையும் துய்த்த அனுபவத்தால் உந்தப்பட்டே Spadina, Simcoe, Rees நழுவுபுறங்களில் அலைத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை பாரிய பலகைத் தளங்கள் போன்றவை. இங்கு வந்து செல்வோர் புதுவிதமாக ஏரிக்காட்சியில் திளைப்பதற்கு அவை நிகரற்ற வாய்ப்பை அளிக்கின்றன.

**நீர்முகத்தில் தனியார்துறை விருத்தி**

Parkside கட்டுமான அமைவிடத்தை Great Gulf Group of Companies-க்கு விற்பதை ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் அங்கீகரித்துள்ளது. உலகப் புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் Moshe Safdie அவர்களால் வடிவமைக்கப்படும் Parkside கட்டுமானம் ஒரு புதுமைவாய்ந்த கட்டிடத் தொகுதியாய் அமையும். வசிப்பதற்கும், வணிகம் புரிவதற்கும், அலுவலகங்கள் வைத்திருப்பதற்கும் இங்கு இடவசதி கிடைக்கும். ஒன்ராறியோ ஏரிக் காட்சிகள் எவரையும் வியக்க வைக்கும். தரைத்தளம் வழியே அயலில் அமைந்திருக்கும் Sherbourne Park-ஐ எவரும் சென்றடையலாம்.

**East Bayfront-ல் உருவாகும் புதிய சோலைகள்**

East Bayfront ஒரு புதிய நீர்முகம். அது Lake Shore Boulevard-ன் அயலில் Jarvis Street முதல் கிழக்கே Parliament Street வரை பரந்தது. East Bayfront அடுத்த சில ஆண்டுகளில் வசிப்பிட - வணிக வசதி, மக்கள் தொடர்ந்து நீர்விளிம்போரம் சென்றடையும் வசதி, அர்ப்பணிப்புடன் கூடிய போக்குவரத்து வசதிகள் கொண்டு துடிப்புடன் மிளிரும் புதிய சமூகமாய் மாறும். East Bayfront பகுதியின் புதிய சிறப்புகளாகிய Sherbourne Park, Canada's Sugar Beach இரண்டும் அமைக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் கோடையில் இரண்டும் திறக்கப்படும்.

**ரொறன்ரோ நீர்முக அமைப்பு (Waterfront Toronto)**

ரொறன்ரோ மாநகராட்சி மன்றம், கனடிய அரசாங்கம், ஒன்ராறியொ மாகாணம் மூன்றும் சேர்ந்து ரொறன்ரோ நீர்முக அமைப்பை தோற்றுவித்துள்ளன. ரொறன்ரோ நீர்முக சீரமைப்பை மேற்பார்வை செய்து, இட்டுச்செல்வதே அதன் பணி. மேலதிக விபரங்களுக்கு நாடவும்: www.waterfrontoronto.ca

**சமூக சூழல் நாட்கள்**

மீளப் பயன்படுத்தவும், மீள்பாவனைக்கிடவும், பத்திரமாக கைதீர்க்கவும்!

ரொறன்ரோவை மிகுந்த தூய்மையும், பசுமையும் கொண்டு வாழ்வளிக்கும் மாநகரமாக மாற்றுவதில் உங்கள் பங்கைச் செலுத்தவும். நீங்கள் பயன்படுத்திய அல்லது உங்களுக்குத் தேவைப்படாத வீட்டுப் பொருட்களை சமூக சூழல் நாள் எதற்கும் கொண்டுவரவும். சம்பந்தப்பட்ட திகதிகளும், புதுநிரலீடுகளும் எமது இணையப் பக்கத்தில் இடம்பெறும். ஒவ்வொரு நிகழ்வுநாளுக்கும் நீங்கள் கொண்டுசெல்லத்தக்க, பெற்றுச்செல்லத்தக்க பொருட்களின் விரிவான விபரங்களுக்கு சமூக சூழல் நாள் இணையப் பக்கத்தை நாடவும்:

சனி, ஞாயிறு நிகழ்வுகள் காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை. வியாழக்கிழமை நிகழ்வுகள் மாலை 4 மணி முதல் 8 மணி வரை.

| **காலம்** | **இடம்** | **குறிச்சி** |
|---|---|---|
| சனி, ஏப்பிறில் 3 | Earl Haig Secondary School<br>100 Princess Ave. (Kenneth Ave. south of Empress Ave.) | 23 |
| சனி, ஏப்பிறில் 10 | Centennial Recreation Centre<br>1967 Ellesmere Rd. (west of Markham Rd.) | 38 |
| ஞாயிறு, ஏப்பிறில் 11 | Lawrence Plaza<br>534 Lawrence Ave. W. (at Bathurst St.) | 15 |
| சனி, ஏப்பிறில் 17 | Toronto Parking Authority Lot<br>John St. at Weston Rd. (Weston Farmers Market location) | 11 |
| சனி, ஏப்பிறில் 17 | Wabash Ave. (Sorauren Ave. to MacDonnell Ave.)<br>(Mayor David Miller will be attending this event) | 14 |
| சனி, ஏப்பிறில் 24 | Malvern Community Recreation Centre<br>30 Sewells Rd. (east of Neilson Rd., north of Sheppard Ave. E.) | 42 |
| ஞாயிறு, ஏப்பிறில் 25 | Downsview Park<br>Sheppard Ave. and Keele St. | 9 |
| சனி, மே 1 | Frederick St.<br>along Frederick St. at The Esplanade and David Crombie Park | 28 |
| சனி, மே 1 | Dieppe Park<br>455 Cosburn Ave. (east of Greenwood Ave.) | 29 |
| சனி, மே 8 | Enbridge Gas (west parking lot)<br>500 Consumers Rd. (west of Victoria Park Ave.) | 33 |
| சனி, மே 8 | McGregor Park<br>2231 Lawrence Ave. E. (west of Kennedy Rd.) | 37 |
| வியாழன், மே 13 | Donwoods Plaza<br>51-81 Underhill Dr. (north of Lawrence Ave. E.) | 34 |
| சனி, மே 15 | SATEC at W.A. Porter Collegiate<br>40 Fairfax Cres. (west of Warden Ave.) | 35 |
| சனி, மே 15 | North Toronto Memorial Arena<br>174 Orchard View Blvd. (west of Yonge St., north of Eglinton Ave.) | 22 |
| வியாழன், மே 20 | Amesbury Arena<br>155 Culford Rd. (south of Lawrence Ave. W., east of Black Creek Dr.) | 12 |

| | | |
|---|---|---|
| சனி, மே 22 | The Albion Centre<br>1530 Albion Rd. (at Kipling Ave.) | 1 |
| சனி, மே 22 | Morningside Works Yard<br>891 Morningside Ave. (south of Highway 401) | 43 |
| வியாழன், மே 27 | Esther Shiner Stadium<br>5720 Bathurst St. (at Finch Ave. W.) | 10 |
| சனி, மே 29 | Seneca College (Newnham Campus)<br>1750 Finch Ave. E. (rear parking lot off Don Mills Rd.) | 24 |
| சனி, மே 29 | Shaw St.<br>along Fred Hamilton Park (south of College St.) | 19 |
| வியாழன், யூன் 3 | Birchmount Bluffs Neighbourhood Centre<br>93 Birchmount Rd. (at Kingston Rd.) | 36 |
| சனி, யூன் 5 | Woodbine Beach Park<br>1675 Lake Shore Blvd. E. (at Coxwell Ave.) | 32 |
| சனி, யூன் 5 | Stan Wadlow Park<br>373 Cedarvale Ave. (east of Woodbine Ave.) | 31 |
| சனி, யூன் 12 | Broadview Ave.<br>along Riverdale Park E. (north of Gerrard St. E.) | 30 |
| ஞாயிறு, யூன் 13 | Wychwood Ave.<br>Wychwood Barns Park (south of St. Clair Ave. W., east of Christie St.) | 21 |
| சனி, யூன் 19 | Commander Park Arena<br>140 Commander Blvd. (off McCowan, south of Huntingwood) | 41 |
| சனி, யூன் 19 | Etienne Brûlé Park (east of Humber River)<br>enter off Catherine St., from Old Mill Dr. | 13 |
| சனி, யூன் 26 | Richview Collegiate<br>1738 Islington Ave. (at Eglinton Ave. W.) | 4 |
| சனி, யூன் 26 | Colonel Samuel Smith Park<br>Kipling Ave. and Lake Shore Blvd. W. (Powerhouse parking lot) | 6 |
| சனி, யூலை 3 | Black Creek Pioneer Village<br>1000 Murray Ross Pkwy. (east of Jane St., off Steeles Ave.) | 8 |
| சனி, யூலை 3 | Central Technical School<br>725 Bathurst St. (enter at Borden St. and Harbord St.) | 20 |
| சனி, யூலை 10 | Loretto College School<br>151 Rosemount Ave. (west of Dufferin St.) | 17 |
| ஞாயிறு, யூலை 11 | Dufferin Mall<br>900 Dufferin St. (south of Bloor St. W.) | 18 |
| சனி, யூலை 17 | Ramsden Works Yard<br>1008 Yonge. St. (across from Rosedale subway station) | 27 |
| வியாழன், செப். 2 | Carmine Stefano C.C. (rear parking lot)<br>3100 Weston Rd. (on west side, just north of Sheppard Ave.) | 7 |

| | | |
|---|---|---|
| சனி, செப். 11 | Stonegate Plaza<br>150 Berry Rd. (at Stephen Dr., east of Park Lawn Rd.) | 5 |
| சனி, செப். 11 | Toronto Parking Authority Lot<br>3885 Yonge St. (south of York Mills Rd.) | 25 |
| வியாழன், செப். 16 | North Toronto Memorial Arena<br>174 Orchard View Blvd. (off Yonge St., north of Eglinton Ave. W.) | 16 |
| சனி, செப். 18 | L'Amoreaux Community Recreation Centre<br>enter off McNicoll Ave. (just west of Kennedy Rd.) | 39 |
| சனி, செப். 18 | Toronto Hydro Building (rear parking lot)<br>2 Civic Centre Court (the West Mall and Burnhamthorpe Rd.) | 3 |
| சனி, செப். 25 | Colonel Danforth Park<br>73 Colonel Danforth Trail (at Kingston Rd.) | 44 |
| ஞாயிறு, செப். 26 | Woodbine Centre<br>500 Rexdale Blvd. (at Highway 27) | 2 |
| சனி, அக். 2 | Agincourt Mall<br>3850 Sheppard Ave. E. (at Kennedy Rd.) | 40 |
| சனி, அக். 2 | Leaside Memorial Gardens<br>1073 Millwood Rd. (at Laird Dr.) | 26 |

toronto.ca/environment_days
or call 311